★★

பாலக்காடு
**ஆர். வி. ஜி.**
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

Registered at the G.P.O. as a Newspaper விலை சதம் 20

# ஈழநாடு
EELA NADU

வாரமலர்

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 9 — இதழ் 58

பராபவ பங்குனி 26 ஜுல்ஹஜ் 28 (9-4-67) ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

பொலிஸாருக்கும், பொதுமக்களுக்குமிடையில் பயங்கர மோதல்

# வல்வெட்டித்துறையில் துப்பாக்கிக்கு மூவர் பலி

## இன்ஸ்பெக்டர், சார்ஜன்ட் ஆபத்து நிலையில் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்; ஞாயிறு

வல்வெட்டித்துறையில் பொலிசாருக்கும மக்கள் கூட்டமொன்றுக்கு மிடையில்நேற்றுமாலைநடைபெற்றபயங்கரத்துப்பாக்கி மோதலில் மூவர்கொல்லப்பட்டதாகவும,பொலிஸ்கோஷ்டியில் வல்வெட்டித் துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பத்திரானு, சார்ஜன்ட் திரு. இராசரத்தினம ஆகியோர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும அறிவிக்கப்பட்டது.

இரு கடைகள் எரிக்கப்பட்டு, வீதியிலிருந்தசைக்கிள்கள்நொருக்கப்பட்டு வல்வெட்டித்துறை நகரமே அல்லோல கல்லோலப்படுமளவுக்கு கலக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை வல்வெட்டித்துறை சனசமூக நிலையத் தலைவர் திரு. ஞானமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் மாலை பெலிசார் இருவர் தாக்குதல் நடத்திய தாககூறப்படும்சம்பவத்தை

[12-ம் பக்கம் பார்க்க]

## முதல் மந்திரிகள் மகாநாடு

புதுடில்லி, ஏப். 8

எல்லா ராஜ்யங்களின் முதல் மந்திரிகள் மகாநாடு இன்று இங்கு ஆரம்பமானது. பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி தலைமையுரை நிகழ்த்தினர். ''கருத்துவேற்றுமை கூடிப்பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டுமே தவிர அதனை வளர்க்கக் கூடாது. வறுமையை ஒருத்து 50 கோடிமக்களின்வாழ்வை சிறப்பானதாக்க ஒருமித்து காரியமாற்றவேண்டும்'' என்று ஸ்ரீமதி இந்திரா சொன்னர். இதனையடுத்து மத்திய உணவு மந்திரி திரு. ஜகஜீவன்ராம் உரை நிகழ்த்தினர்.

## ராஜாஜிக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது

சென்னை, ஏப். 8

சுதந்திரா கட்சித்தலைவர் ராஜாஜிக்கு ஹேணியா அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, சுகமாக இருக்கிருரென அறிவிக்சப்பட்டது.

இன்று சென்னையிலுள்ள நர்ஸிங்ஹோமில் ராஜாஜி அனுமதிக்கப்பட்டு, அங்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. இன்னும் பத்து நாட்கள்வரை நர்ஸிங் ஹோமிலேயே தங்கவேண்டுமென்று டாக்டர்கள் தெரிவித்திருத்துள்ளனர் நீண்ட ஆயுசுபெற்று வாழவேண்டுமென்று ராஜாஜிக்கு ஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தந்திமூலம் தெரிவித்துள்ளார். ஏபிசு 89

## யுதாண்ட் இன்று பிரதமரை சந்திக்கிருர்

கொழும்பு, சனி

ஐ. நா வின் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இன்று நண்பகல் கட்டுநாயக்கா விமான நிலயம் வந்து சேர்ந்தபோது ராஜாங்க அமைச்சர் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனு மற்றும் மந்திரிகளும், அரசியல் பிரமுகர்களும் இலங்கையிலுள்ள ஐ நா பிரதிநிதி திரு அனட்டலி குரோமோல் ஆகியோர் வரவேற்றனர்

யுதாண்ட் நாளை காலை பிரதமர் டட்லி சேனநாயக்காவை அலரிமாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவார். வியட்னும் தகராறில் சமரசம் ஏற்படுத்தி வைப்பதற்கான தமதுபுதியயோசனையை பிரதமர் யுதாண்டிடம்தெரிவிப்பார்.

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் விமான நிலையத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் முன்னர் ஒருதடவை இலங்கை வந்திருப்பதாகவும் இலங்கைக்கு விஜயம் செய்வதில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், தமக்கு அழைப்புவிடுத்தமைக்காக நன்றி தெரிவிப்பதாகவும் கூறினர்.

பிரதமருடன்பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கையை விட்டுப்புறப்படுகையிலேயே விரிவான அறிக்கை ஒன்றை

[12-ம் பக்கம் பார்க்க]

## மரண அறிவித்தல்

சுழிபுரம் திருமதி இலங்கைநாதன் தெய்வநாயகம்

சுழிபுரம் மழவராயர் வளவில் வசித்துவந்த திருமதி தெய்வநாயகம் இலங்கைநாதன் 8-4-67 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் மலேயாவில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றிய காலம் சென்ற திரு. இலங்கைநாதனின் அருமை மனைவியும் யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி மனேஜர் கந்தசாமி, கொழும்பு சென்றல் கொம்மோஷல் கம்பெனி செல்லத்துரை ஆகியோரின் அருமைத் தாயாரும் சுழிபுரம் முன்னுள் கிராமாதிகாரி சி. அப்புத்துரை அவர்களின் அருமைச் சகோதரியும் தொல்புரம் மலேயன் பென்சனர் ந மகாதேவன் அவர்களின் மைத்துனியுமாவர். அன்னுரின் பூதவுடல் ஈமக்கிரிகைக்காக சுழிபுரம் மழவராயர் வளவிலிருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

1

அருந்துங்கள்!

பால் சபையின்

நீண்ட காலம்

பாவிக்கக்கூடிய




பால்

குளிர்ச்சியூட்டத் தேவையற்ற

பால்

யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# அண்ணாவின் விளக்கம் இங்கு அச்சத்தை நீக்குமா?

## மீண்டும் அரசியலாகும் இந்தியர் பிரச்னை

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டதால் இலங்கையிலுள்ள தமிழர், அவர்களுடன் சேர்ந்து கொள்வார்களென்றும் இலங்கையில் சிங்கள மக்களுக்(கு)இனி இடமே இல்லாது போய்விடுமென்றும் முன்னாள் பிரதமரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா உட்பட எதிர்க்கட்சியினரும் எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் சிலவும் 'தி. மு. க. பூச்சாண்டி' காட்டிவந்தனர். இதே சமயம் தி. மு. க. ஆட்சிக்கு வந்ததால் தமிழர் தரணியில் தலைநிமிர்ந்து நிற்கலாமென்று 'நமது தமிழர்' சிலர் பெருமையோடு கூறிக்கொண்டனர். எம். ஜி. ஆரின் வெற்றிக்காகப் பட்டாசு வெடிகொளுத்தியவர்களும்கூட தி. மு. க. ஆட்சிக்கு வந்ததைக்கண்டு தங்கள் குறைகளெல்லாம் நீங்கிவிடுமென்றும் ஆரவாரம் செய்தனர்.

தி. மு. க. வெற்றியைக் கண்டு ஒருபகுதியினர் அகமகிழ்வுப மற்றொரு பகுதியினர் வயிற்றெரிச்சலும் அடைந்த காட்சியை தி. மு. கழகத்தினர் தங்கள் நாட்டில் கண்ணாரக்கண்டுகொண்டது போதாதென்று அவர்கள் வெற்றியைப்பற்றி இலங்கையில் 'ஆதரவும் எதிர்ப்பும்' கிளம்பியிருப்பதைக் காதாரக் கேட்கும் வாய்ப்பையும் பெற்றனர்.

தமிழ்நாட்டில் ஆதரவாளர்களுக்கு நன்றியும்எதிர்ப்பவர்களுக்குப் பதிலும் சொல்லிச் சமாளித்துவரும் தமிழ்நாடு முதல் மந்திரியும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான திரு. சி. என். அண்ணாதுரை இலங்கையில் தங்கள் ஆட்சியைக் கண்டு அஞ்சுவோருக்கும் அகமகிழ்வோருக்கும் பதில் சொல்லியிருக்கின்றார்.

இலங்கையில்வாழும்தமிழ் பேசும் மக்களுக்கு குறிப்பாக இந்திய வம்சாவழியினருக்கு திரு. அண்ணாதுரை ஒரு பத்திரிகைமூலம் விடுத்துள்ள ஒரு செய்தியில், "நீங்கள்வாழும் நாடே உங்கள் நாடு. அந்த நாட்டின் மீதே உங்கள் பற்று, பாசம் அனைத்தும் இருக்கவேண்டும். தமிழகத்துடனும் இந்தியாவுடனும் உங்கள் பிணைப்புகள், தமிழ், தமிழர், கலை, கலாசாரம் என்ற துறைகளில் மாத்திரமே நிலவட்டும். இதனைத் தவிர்த்து அரசியல் அடிப்படையில் வெளிநாட்டுத் தமிழர்கள் இந்தியாவுடன் தொடர்பு வைப்பதைக் கண்டிப்பாக ஆதரிக்க முடியாது" என்று திரு. அண்ணாதுரை தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்துவிட்டதென்றும் அண்ணா ஆட்சி அங்கு வந்துவிட்டதால் நமக்கு இனி என்னகுறை என்றும் ஆரவாரம் செய்தவர்களுக்கு அண்ணா சரியான பதில் கொடுத்திருக்கிறார். இந்தியா வேறு, இலங்கைவேறு என்பதை அவர் எடுத்துக் காட்டியிருப்பதுடன் இலங்கையின், இலங்கை மட்டுமல்ல வேறு எந்த நாட்டினதும் உள்விவகாரத்தில் இந்திய அரசாங்கம், தமிழ் நாட்டு அரசாங்கம் தலையிட முடியாது என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். தி. மு. க. அரசு இலங்கையைப் பயமுறுத்தும் அல்லது படையெடுக்கும் என்பதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு என்றும் அண்ணா கூறியிருக்கிறார். சென்னையிலுள்ள இலங்கையின் உதவித் தூதரிடத்திலும் அவர் விளக்கிக் கூறியிருக்கிறாராம்,

சென்ற சில வாரங்களுக்கு முன் தி. மு. கழக ஆட்சி பற்றி எதிர்க் கட்சியினர் பூச்சாண்டிகாட்டுவது பற்றி இப்பத்தியில் நான் குறிப்பிட்டபொழுது, தி. மு. க. பூச்சாண்டி எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரசாரமே என்றும் இது அரசியல் இலாபம் சம்பாதிக்கும் முயற்சியேயென்றும் குறிப்பிட்டிருந்தேன். தேர்தல் பிரசாரத்துக்கு இதைப் பயன்படுத்தி அதில எதிர்க்கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர். தி. மு. க. பூச்சாண்டி அரசியல் பிரசாரமாயினும் நாட்டில் சமூக நல்லுறவை அது பாதிக்கக்கூடியதேயாகும். சென்னையிலுள்ள உதவித் தூதரிடம் திரு. அண்ணாதுரை கூறிய விளக்கத்தையே அரசாங்கம் வெளியிட்டு எதிர்க்கட்சியினரின் பொய்ப் பிரசாரத்தை முறியடித்திருக்கலாம். அரசாங்கம் இதில் கவனம் செலுத்தவில்லையா அல்லது உதவித் தூதர் 'இது பெரிய விஷயமல்ல' என்று அசிரத்தை செய்தாரா?

அரசியல் இலாபத்துக்காகவே தி. மு. கழகத்தையும் தமிழரசுக் கட்சியையும் முடிச்சுப் போட்டு எதிர்க் கட்சியினர் பிரசாரம் செய்துவருகின்றனர் என்பது உண்மை. ஆயினும் இந்தப் பிரசாரம் பொது மக்கள் மத்தியில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, சீரடைந்துவரும் தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைத்து, சிறுபான்மைச் சமூகத்தின் மீது பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுத்தவும் இதன் விளைவாக நாட்டின் அமைதி பாதிக்கவும் வழிவகுக்கக் கூடும். தி. மு. க. பயமுறுத்தல்பற்றி எதிர்க்கட்சியினரும் அவர்கள் பத்திரிகைகள் மட்டுமன்றி "தேசிய பத்திரிகைகள்" என்று கூறிக்கொள்ளும் சில பத்திரிகைகளும்கூட துவேஷத்தை ஊட்டுகின்றன. இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுடன் தி. மு. கழகத்துக்கு அரசியல் தொடர்பு இருக்க முடியாதென்றும் இலங்கையின் உள் விவகாரத்தில் இந்திய அரசோ, தமிழ் நாட்டு அரசோ தலையிடமாட்டாதென்றும் திரு. அண்ணாதுரை கூறியிருப்பதை இப்பத்திரிகைகள் வெளியிட்டால் என்ன? தேசிய ஒற்றுமைபற்றிக் கூறும் இப்பத்திரிகைகள் எதிர்பார்க்கும் தேசிய ஒற்றுமை என்ன?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இந்திய அரசுடனோ, தமிழக அரசுடனோ அரசியல் ரீதியான தொடர்பு கொள்ள முடியாது என்று திரு. அண்ணாதுரை தெரிவித்திருப்பது இங்குள்ள பெரும்பான்மை சமூகத்தினருக்கு ஆறுதலளிக்கவேண்டும். ஆனால் இங்குள்ள தமிழ் பேசும்மக்களில் சிலருக்கு ஏமாற்றமும் அளிக்கலாம். ஆயினும் 1958-ம் ஆண்டு நிகழ்ந்தது போன்ற துர்ப்பாக்கிய சம்பவங்கள் இங்கு இனி நிகழநேர்ந்தால் [அப்படி நிச்சயம் ஏற்படமாட்டாது] அந்தச்சமயத்தில் இங்குள்ள தமிழ்பேசும் மக்களுக்காக இந்திய அரசாங்கம ஒரு தடவையாவது குரல் எழுப்புவதற்கு அண்ணாவின் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திக்காமல் இருக்குமா? தென்வியட்நாமில் பௌத்தர்கள் துன்புறுத்தப்பட்டபோது ஐ. நா.வில் குரல் எழுப்பியது தவறு என்று யாரும் சொல்லவில்லையே.

### இந்தியர் பற்றி நேரு கொள்கை

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழி மக்கள் இலங்கையையே தங்கள் நாடாகக் கருதவேண்டும் என்பது திரு. அண்ணாதுரையின் செய்தியில் தொனிக்கும் அர்த்தம். இலங்கையிலுள்ளவர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டிலுள்ள இந்திய வம்சாவழி மக்கள் அனைவரும் தாங்கள் வாழும் நாட்டையே தங்கள் தாய்நாடாகக் கருதவேண்டுமென்பது இந்தியாவின் கொள்கையாக இருந்துவந்திருக்கிறது. இதனால் தான் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பற்றிய பிரச்னை எழுந்தபோதெல்லாம், இந்திய வம்சாவழியினர் பிரச்னை இலங்கையின் பிரச்னை என்று காலஞ்சென்ற பிரதமர் நேரு கூறிவந்தார். இந்தியாவை எதிர்நோக்கியிருந்த நெருக்கடியான சமயத்தில் வெளியார் நிர்ப்பந்தம் காரணமாக நேருவின் கொள்கையிலிருந்து விலகவேண்டிய நிலை சாஸ்திரிக்கு ஏற்பட்டது. அதன் விளைவு தான் சாஸ்திரி-சிறிமா ஒப்பந்தம். அண்ணாவும், இலங்கை இந்தியர் சம்பந்தமாக நேருவின் கொள்கையையே பின்பற்றியபோதிலும் இரு அரசாங்கங்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டியதே என்று கூறுகிறார். இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும் மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசாங்கத்துக்குத் தமிழ் நாடு அரசாங்கம் உதவிபுரியும். 1953ம் ஆண்டில் இலங்கை வந்திருந்த தி. மு. க. பிரமுகர்களில் ஒருவரான திரு. சி. பி. சிற்றரசு அப்போது கூறியதுபோல், தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரை அண்ணா விமானத்தில் அழைப்பாரென்று கூறியது சுலபமாக நடைபெறக் கூடிய விஷயமல்ல.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை தி.மு.கழகத்தினர் முன்பு கண்டித்தபோதிலும் ஒப்பந்தத்தைமதித்துநடக்க இப்பொழுது முன்வந்துள்ளனர். இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கான மசோதா இலங்கைப்பார்லிமெண்டில் இருக்கிறது. இது நிறைவேறியதும் ஒப்பந்தம் அமுலாகும்.

[12-ம் பக்கம் பார்க்க]




உலகின் ஈடுஇணையற்ற சுகத்தைப்பெற
மெகவிட்டோன்




விட்டமின் சத்துக்கள் கொண்ட குடும்ப டானிக்

பலவினம் - மெலிவு நரம்புத்தளர்ச்சி-களைப்பு? இதோ இருக்கிறது மெகவிட்டோன். பரீட்சித்துப்பார்த்து சிறந்ததென தலைமுறை தலைமுறையாக பாவிக்கப்படும் மெகவிட்டோன் உங்கள்உணவு உட்கொள்ளும்சக்தியை அதிகரித்து, உணவுகளை ஜீரணிக்க உதவுகிறது. உங்கள் நரம்புகளுக்கு போஷாக்கு சக்தியை அளித்து அமைதியாக நித்திரை செய்ய உதவுகிறது. உங்கள் உணவுக்கு விட்டமின்களையும், கனிஜ பொருட்களையும் அளித்து போஷாக்குமிக்க உணவாக்குகிறது. விரைவில் ஆரோக்கியத்தையும், பலத்தையும் பெறவும் ஈடு இணையற்ற சுகத்தைப்பெறவும் உதவுகிறது.

ஓரியண்டல் ட்ரக் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
331, காலி ரோட், கொழும்பு-3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை பெற்ற ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் சுதந்திரத்துக்கு ஆபத்தா?

## அந்நியரின் தலையீடுகளை ஒழிக்க ஓர் அமைப்புத்தேவை

**உலக மேடை**

எஸ். எம். ஜி.

இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்? இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயின் அஞ்சுவது போல், இந்திய மக்களின் இன்றைய விபரீதப் போக்கு இன்னும் சிலகாலத்துக்கு நீடித்தால், தியாகங்கள் பல செய்து பெற்ற சுதந்திரத்தை இந்தியா இழந்துவிடத்தான் வேண்டி ஏற்படுமா? நான்காவது பொதுத்தேர்தலின் பின் அதாவது நேரு இல்லாத இந்தியாவில் நடைபெறும் பொதுத்தேர்தலின் பின் இந்தியாவில் ஜனநாயகம் சீரழிந்துவிடுமென்றும் இனி அங்கு தேர்தலே நடைபெறுமென எதிர்பார்க்க முடியாதென்றும் சில மேல் நாட்டவர் கூறிய சாக்குருவிசோதிடம் உண்மையாகிவிடுமா?

பொதுத்தேர்தலுக்கு முன்னும் அதன்பின்னும் இந்திய நாட்டில் வளர்ந்துவரும் சுயநலப்போக்கும், மொழி, இன, மாகாண வெறிகளும் கோஷ்டி மனப்பான்மையும், பதவிப் பூசல்களும் இந்திய நாட்டிலும் நாட்டைச்சுற்றிலும் என்ன நடைபெறுகிறதென்ற அக்கறையற்ற போக்கும் ''கண்ணீர் விட்டு வளர்த்த'' சுதந்திரத்தைத் தோற்கச் செய்து விடுமோவென்ற மனவேதனையில் உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயின் ''சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிடுமே'' என இந்திய மக்களை எச்சரித்திருக்கிறார். இந்திய சுதந்திரப் போராட்ட தியாகத்தீயில் புடம் போடப்பெற்ற வீர பரம்பரையில் வந்தவர் டாக்டர் ஸாகீர் ஹுசெயின். அவரைப் போன்ற, அவரது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் சிலர்தான் இன்று இருக்கின்றனர்.

நடந்து முடிந்ததேர்தலில் சிலராஜ்யங்களில் காங்கிரஸ் கட்சியே அறுதிப் பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சி பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் அறுதிப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டது. கேரளத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி ஆட்சி பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டது. மற்றும் சில ராஜ்யங்களில் எந்தக்கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய பொறுப்பைமக்கள் அளிக்கவில்லை. இதன் விளைவுதான் ராஜஸ்தானில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப் பட்டதுமாகும். தமிழ்நாட்டிலும் சரி, கேரளத்திலும் சரி மற்றும் காங்கிரஸ் ஆட்சி பீடத்துக்குத் தெரிவுசெய்யப்படாத ராஜ்யங்களிலும் கூட அபேட்சகர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகளைக்கணித்துப் பார்க்கையில் காங்கிரசுக்கே எல்லா இடங்களிலும் அதிக வாக்குகள் கிடைத்திருப்பது தெரியவரும். பார்லிமெண்டில்காங்கிரஸின்பலம் முன்னையவிடக் குறைந்திருப்பினும் கூட அளிக்கப்பட்ட மொத்தவாக்குகளைக் கணித்துப் பார்த்தால் காங்கிரசுக்குக் கிடைத்தவாக்குகள்முன்னையவிடக் குறைந்துவிடவில்லையென்பது தெரியவரும். என்றாலும் சென்ற சில காலமாக காங்கிரசுக்குள்ளேயே வளர்ந்துவிட்ட, வளரவிட்ட கோஷ்டிப்பூசல்களும், பதவிப் போட்டிகளும் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஹரியானாவிலும், புதுச்சேரியிலும், உத்தரப்பிரதேசத்திலும்காங்கிரஸ்அபேட்சகர்களாகவே தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு பெற்று, ஆட்சியை அமைத்துக் கொண்ட பின்னர் காங்கிரஸிலிருந்து விலகி, புதிய கட்சிகளை எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து அமைத்துக் கொண்டு, காங்கிரஸ் அரசாங்கங்களை வீழ்த்தியிருக்கின்றது. இந்தப் பதவிப்போட்டி ஹரியானா, புதுச்சேரி, உத்தரப் பிரதேசம் ஆகியவை காட்டியுள்ள வழிகளை மத்தியபிரதேசமும் மற்றும் சில ராஜ்யங்களும் பின்பற்ற முனையலாம். இதனால்தான் ஆந்திர முதன்மந்திரி பிரம்மானந்தரெட்டி, தனக்கு எதிராகக் கிளம்பக்கூடிய சுப்பாரெட்டியாரையும் அவரது சகாக்களையும் சேர்த்து தமது மந்திரி சபையை விஸ்தரித்திருக்கிறார். ராஜஸ்தான் குழப்பம், உத்தர பிரதேச வீழ்ச்சி, கேரளத்தில் போர்க்குரல், மேற்கு வங்காளத்தில் கலசம் ஆகிய சம்பவங்களும் பீகார், ஒரிஸ்ஸா வரட்சியும் பஞ்சமும் அவற்றைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள, அவற்றுக்குப் பின்னணியிலே உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் சக்திகளின் திரைமறைவுமுயற்சிகளும், உணவுக்காகவும், அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் வெளிநாடுகளின் உதவியை நம்பியிருக்கும் நிலையும், எல்லையில் இரு புறத்தில் வெளியாரின் ஆபத்து எந்நேரமும் எதிர்நோக்கிக் கொண்டிருப்பதும் ஆகியவைகளேஇந்தியாவின் சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிடுமோவென டாக்டர் ஸாகீர் ஹுசெயின் அச்சமும் கவலையும் தெரிவிக்கக் காரணமாகும். சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை எடுத்துக் காட்டி மக்களை விழிப்புடன் இருக்கும்படி எச்சரிப்பது அவரது நோக்கம்.

ஆனால் இந்தியாவில் இனி ஜனநாயகம் பிழைக்காது. அது செத்துவிடும்'' என்று மேலைநாட்டு 'பெரியார்கள்' கூறுவது இந்தியாவின் நன்மையில் உண்மையான அக்கறையுடனோ, இந்திய மக்கள்மீது அனுதாபம் கொண்டோ அல்ல என்று கூறலாம். இந்தியாவிலிருந்தோ அல்லது ஆசிய ஆபிரிக்கக் கண்டங்களிலுள்ள வேறு எந்த நாட்டிலிருந்தோ மேல் நாட்டவர்கள் தாமாக விரும்பி அந்த நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டுச் செல்லவில்லை. மக்களின் எழுச்சியை, சுதந்திரதாகத்தை இனியும் தணிக்க முடியாது என்ற நிலையில்தான் அவர்கள் வெளியேறினார்கள். அவர்கள் நல்லெண்ணத்துடன் செல்லாததால்தான் ஒவ்வொரு நாட்டிலும் ஏதாவது ஒரு பிரச்னையை உருவாக்கிவிட்டுச் சென்றனர். இந்தியாவில் காஷ்மீர் பிரச்னை இதற்குஉதாரணம். இந்தியாவில் பஞ்சமும் பட்டினியும் தோன்றியிருப்பதும் இந்தியாவில் மாகாணங்களுக்கிடையில் வேறுபாடுகள் தோன்றியதும் அங்கு தேசிய ஒற்றுமை குலைவதும் அவர்களுக்கு உள்ளூர மகிழ்ச்சியாகத்தானிருக்கவேண்டும். இந்தியாவில்மட்டுமல்ல ஆசிய ஆபிரிக்க நாடுகள் எதுவும் தலைதூக்கக்கூடாதென்பதே அவர்களின் நோக்கமாக இருக்கிறதென்றே சொல்லலாம். இதை இவ்வளவு 'பச்சை'யாகச் சொல்வது கசப்பானதுதான். ஆயினும் சொல்லவேண்டியதைச் சொல்லித்தானாகவேண்டும். ஆசிய ஆபிரிக்காவில் தளங்களை வைத்துக்கொண்டிருப்பதுடன் அவற்றை விட்டுச் செல்ல விரும்பாததுடன் வெளியேற நேரும் சமயத்தில் புதிய பிரச்னைகளைக் கிளப்பிவிடுகிறார்கள். இல்லையேல் புதிதாக தளம் அமைக்க இடம் தேடுகிறார்கள். ஏடனையும் சிங்கப்பூரையும் விட்டு வெளியேறவிருப்பதால் இந்து சமுத்திரத்தில் தளம் அமைக்க இப்பொழுது முயற்சி செய்யப்படுகிறது. இந்தியா பாகிஸ்தான் பிரிந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை காணமுடியாதபடி ஒரு காஷ்மீர் பிரச்னை தடையாக இருக்கிறது. வியட்நாமில் தென் வியட்நாம் வட வியட்நாம் என்ற பிரிவு. கொரியாவில் வடக்கு தெற்கு என்ற பிளவு. இவைதவிர சைப்ரஸில் இனப்பகை, ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் மோதல், அரபு நாடுகளுக்கிடையில் பூசல். இப்படி எங்கும் எதிலும் குழப்பமான, வேறுபட்ட நிலைதான். இந்தப் புண்ணிய கைங்கரியங்களுக்கு யார் காரணம்?

அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு உதவிபுரிகிறார்கள். உதவி புரியும் அவர்களின் நல்லெண்ணத்தைப் பாராட்டவேண்டும். சுயநலமில்லாமலா உதவிபுரிகிறார்கள்? யார்தான் தன்னலம் பேணாமல் உதவி செய்வார்கள்? உதவியென்ற பெயரில் உபத்திரவம் கொஞ்சமா? கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்கவும், உலகில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் தாங்கள் உதவிபுரிவதாகக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் ஜனநாயகம் சீர்குலைந்து, சர்வாதிகாரம் தலைதூக்கவும், சர்வாதிகார ஆட்சி ஏற்பட்ட பின்னரும் ஜனநாயகத்துக்கு எதிரான கொள்கையுடையவர்களுக்கும் தொடர்ந்து உதவி அளிப்பது எந்த நல்லெண்ணத்துடன்?

மேற்கு நாடுகள், மேற்கத்திய வல்லரசுகள் செயல் இப்படியென்றால் சமத்துவம் பேசும் சோஷலிஸ அரசுகள் என்று கூறிக்கொள்ளும் கம்யூனிஸ்டு நாடுகளும் விடுதலையடைந்த நாடுகளின் விஷயத்தில் தலையிடாதிருக்கின்றனவா? உதவி என்ற பெயரில் அவைகளும் உபத்திரவம் கொடுக்காதிருக்கின்றனவா? தங்கள் கொள்கையைப் பரப்பவும், தங்கள் அதிகாரத்தைத் திணிக்கவும், மேற்கத்திய அதாவது அவர்களது பாஷையில் சொன்னால் முதலாளித்துவ நாடுகளின் கொள்கையையும் ஆதிக்கத்தையும் எதிர்த்து அவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு புதிதாக விடுதலையடைந்த நாடுகளைய பகடைக்காய்களாக சோஷலிஸ நாடுகள், அரசுகள் உபயோகிக்கின்றன.

அந்நிய ஆதிக்கத்தின்கீழ் பல்லாண்டுகள் அடிமை வாழ்வு வாழ்ந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் பல, பெரும் போராட்டங்களை நடத்தி பெரும் தியாகங்களைச் செய்து பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது வெளி அரசுகளின் தலையீடுகள் தடைசெய்கின்றன. தடை செய்வதுமட்டுமல்ல, சுதந்திரத்தையே பறிகொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையை ஏற்படுத்துகின்றன.

### ஆட்சி முறையில் மாற்றம் தேவை

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த நாடுகள் அந்நியரின் தலையீடு காரணமாகப் பல இன்னல்களையும் சோதனைகளையும் அனுபவிக்கவேண்டி நேரிட்டது. ஜனநாயக வாழ்க்கை முறை பல நாடுகளில் தோல்வியடைந்துள்ளன. சர்வாதிகார இராணுவ ஆட்சியும் கூட மற்றும் பல நாடுகளில் வெற்றியளிக்கவில்லை. எனவே கடந்த கால அனுபவங்களைக் கொண்டு, ஆசிய ஆபிரிக்க நாடுகள், அந்நியரின் தலையீடு இல்லாது, தங்களுக்குள்ளேயே உதவியும் ஒத்

(11-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் கல்விக்கு நேர்முக ஆபத்துகள்

## பெற்றோர் அசிரத்தை: பிறைவேட் டியூஷன்

ஊர் மக்கள் ஒன்றுகூடி தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியறிவு ஊட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் கலாசாலைகளைக்கட்டி, தக்க ஆசிரியர்களை நியமித்துவந்த காலத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் பெற்றோருக்குமிடையே ஒத்துழைப்பும் உறவாடலும் இருந்து வந்தது. ஆசிரியர் பெற்றோருடன் அடிக்கடி மாணவரைப்பற்றியும் அவர் வகுப்பிலுள்ள நிலைமையைப் பற்றியும் கலந்துரையாடுவர்.

இத்தகைய சௌஜன்யமான சூழ்நிலை நாளாவட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மாறி இலவசக்கல்வி திட்டமும் அரசாங்கத்தின் பள்ளிக்கூட சுவீகாரமும் வந்தபின் இப்பொழுது ஆசிரியருக்கும் மாணவருக்கும் பெற்றோருக்கும் இடையில் இருந்த உறவு துப்புரவாக அறுந்துபோய் விட்டதென்று கூறலாம்.

பெற்றோர்-ஆசிரிய சங்கங்கள் என்பதாக சில இடங்களில் இருப்பது உண்மைதான். ஆனால் இவைபெரும்பாலும் பெயரளவில்தான் தொழில் படுகின்றன என்று கூறலாம். ஆயிரம்பெற்றோர்கள் இருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் இச்சங்கக்கூட் [illegible] பெருங்கஷ்டமாயிருக்கிறது. மீதிப்பேர் அனைவரும் ஏனோதானோ என்று இருந்துவிடுகிறார்கள்.

இப்படி அவர்கள் நடந்துகொள்வதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கத்தான் செய்கிறது.

'பிறைவேட்' வாத்தியார் என்ற ஒரு பிரகிருதி தோன்றினார். முற்காலத்தைய கல்வித்திட்டத்தில் இவருக்கு இடமிருக்கவில்லை. பள்ளிக்கூட ஆசிரியரே சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு திரிகரண சுத்தியுடன் தமது குருகுலத்தை நடத்தி வரும்போது 'பிறைவேட்' வாத்தியாருக்கு அங்கு இடம் இல்லை. ஆனால் இன்று நமது கல்விமுறையில் உண்டான மாறுதல்கள் காரணமாக, பள்ளிக்கூட ஆசிரியர்களில் நம்பிக்கை இழந்தோ அல்லது அறுபது புள்ளி எடுத்த தங்கள் புதல்வன் தொண்ணூறு புள்ளி எடுக்க வேண்டும் என்ற பேராசையினாலோ பலபெற்றோர் வீட்டில் ஒரு 'பிறைவேட் டியூட்ட'ரையும் அமர்த்திக் கொண்டார்கள். இவர் இன்று நமது சமுதாயக் கல்வித் திட்டத்தில் நாயுருவி போல் ஒட்டிக் கொண்டார். இவரை அகற்ற முடியாதென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

டியூஷன் மாஸ்டர் மாதத்தில் ஒருபிள்ளைக்கு நாற்பது, ஐம்பது என்று வாங்குவார். எனக்குத்தெரியக்கூடியதாக ஒரு நண்பர் தமது மூன்று பிள்ளைகளுக்கும் டியூஷன் கொடுப்பதற்காகமாதத்தில் நூற்றைம்பது ரூபா செலவு செய்கிறார். இலவசக்கல்வி என்ற பெயரே ஒழியபெரும்பான்மையான பள்ளிக்கூடங்கள் மேல் வகுப்பு மாணவருக்கு மாதம் கிட்டத்தட்ட பத்துரூபாய் வசதிச்செலவு கட்டணமாக வசூலிக்கின்றன. இது போக பிள்ளைகளின் போக்குவரத்து செலவுகள்வேறு. இதெல்லாவற்றையும் பார்க்குமிடத்து 'இலவசக்கல்வி' என்பது ஒரு தவறான பெயர் என்று தோன்றுகிறதல்லவா?

'பிறைவேட் டியூஷன்' மாஸ்டரால் சில சமயம் நன்மையுண்டு, பலசமயம் ஆபத்துண்டு. பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கும் உபாத்தியாயர் தாம் நினைத்தபிரகாரம் ஒரு கல்வித்திட்டத்தை வகுத்து அதன்பிரகாரம்படிப்பித்துக் கொண்டுவருவார். அதே பாடத்தை வீட்டுக்கு வரும் டியூஷன் மாஸ்டர் தமக்குத் தெரிந்த முறையில் புகட்டுவார். இரண்டு போதனைகளுக்குமிடையில் துளியாவது

[10-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு வழக்கு அகராதி: கலாநிதி கூறியது என்ன?

## மூதூர் சந்திப்பு பற்றி ஒரு விளக்கம்

**— வ. அ. இராசரத்தினம் —**

3-3-67 'ஈழநாடு' இதழில் தமிழில் பேச்சு வழக்கு அகராதி, கலாநிதியுடன் ஒரு சந்திப்பு என்ற (பேட்டிக்) கட்டுரையைப் படித்தேன். அச்சந்திப்பு என்வீட்டில் நிகழ்ந்தமையினாலும் அச்சந்திப்பிலே நானும் முக்கிய பங்கு வகித்தமையினாலும் அச்சந்திப்பின் போது பரிமாறப்பட்ட உண்மைகளை எழுதவேண்டியது என் தவிர்க்க முடியாத கடமையாக இருக்கிறது.

'பேச்சிலும் எழுத்திலும் கொச்சை ஒழிக்கப்படல் வேண்டும். செந்தமிழ் செழிக்கவேண்டும். இலக்கண வரம்பும் மொழிமரபும் காப்பாற்றப்படல் வேண்டும்' என்று பேசியும் எழுதியும் வருபவர் கலாநிதி ஆ. சதாசிவம் என்பது நாடறிந்த விஷயம்.

கலாநிதி உண்மையாகவே தெரிவித்த கருத்துக்களை 'ஈழநாடு' வாசகர்கள் முன் வைக்காவிட்டால், ஆசிரியர் வ. நீ. எழுதியவைகளே உண்மையாக இருக்கும் என வாசகர்கள் மயங்கலாமல்லவா? அம் மயக்கத்தைப் போக்கவே நான் இதை எழுதவேண்டியிருக்கிறது.

பேச்சு வழக்கு அகராதி தொகுக்கும் நோக்கத்தைப் பற்றிக் கலாநிதி தெரிவித்த கருத்து இதுதான்.

"இன்று எத்தனையோ எழுத்தாளர்கள் பேச்சு வழக்கிற் கதைகளை எழுதுகிறார்கள். அப்படி எழுதுபவர்களைக்கேட்டால் வழக்குச் சொற்களைப் பிரயோகித்து எழுதாவிட்டாற் கதையில் உயிர்இருக்காது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்களைச் செந்தமிழில் எழுதச் செய்வதென்பது எவராலும்முடியாத காரியம். வழக்குச் சொற்களைப் பிரயோகிக்கும் சில ஆசிரியர்கட்கே அவைகட்கான செந்தமிழ்ச் சொற்கள் தெரியாது. இப்படியான எழுத்தாளர்களின் கதைகளைப் படிக்கும் பலரும் இவ் வழக்குச் சொற்களே இலக்கணச் சொற்கள் எனக் காலப்போக்கில் மயங்கலாம். சர்வகலாசாலை மாணவர்கள் சிலர் கூட 'ஒண்ணு' என்று எழுதுகிறார்கள். மேலும் இலங்கைப் பிராந்திய வழக்குச் சொற்கள் தங்கட்குவிளங்குவதில்லை. அதனால் ஈழத்துச் சிருஷ்டி இலக்கியங்களைத் தங்களால் வாசிக்க முடியவில்லை எனத் தமிழ் நாட்டிலே சிலர் சொல்கிறார்கள். இவைகட்காக வழக்குச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்குச் சரியான செந்தமிழ்ச் சொற்களை எழுதி வைத்தால் அது எழுத்தாளர்கட்கும் வாசகர்கட்கும் மற்றையோர்க்கும் பயன்படும்."

கலாநிதி இப்படியாகக் கருத்துத் தெரிவிக்க ஆசிரியர் வ. நீ. அவர்களோ,

"கதை சூழலுக்கியைபாக அமைவதால் சூழலின் வழக்குச் சொற்களைச் சேர்க்காவிட்டால் கதை சோபை இழந்து விடும்." என்று கலாநிதி கூறியதாக எழுதியிருக்கிறார்.

. . . கிராமிய வழக்கு மொழிகளை ஏன் கதைகளிற் புகுத்தவேண்டும்என்றஅவர் கேள்விக்குப் பதிலாக நான் தான், "எடுத்துக்கொள்ளும் கதைக்குத் தக்கதாகமொழி நடை அமைய வேண்டும். சரித்திர, இதிஹாச, புராணக் கதைகளை எழுதும் போது பிரச்னையே இல்லை. அவைகளைச் செந்தமிழிற் தான் எழுதுகின்றோம். ஆயின் சமூகக்கதைகள் எழுதும்போது ஆகக் குறைந்த பட்சம் கதாபாத்திரங்களின் சம்பாஷணையையாவது அவர்கட்கியைபான நடையிலே, வழக்கு மொழியிலேயே எழுதவேண்டும். அப்படி எழுதாவிட்டாற் கதையில ஒரு போலித்தன்மை மிகுந்து ஜீவனற்றதாகவே இருக்கும். நாங்கள் மட்டுமல்ல இந்திய எழுத்தாளர்களும் இப்படித்தான் எழுதுகிறார்கள்" என்று சொன்னேன். இதை மறைத்து, "வழக்கு மொழிகளைச் சேர்க்காவிட்டால் கதை சோபிக்காது" என்று கலாநிதி சொன்னதாகத் திரித்து எழுதுவதுஎன்னமுறையோ?

இப்படியாக நான் சொன்னதும் தீவிர 'செந்தமிழ் வாதியான' ஆசிரியர் வ. நீ. சற்று ஆத்திரமடைந்தவராய் "கதாசிரியர்கள் தான் தமிழைக் கொலைபண்ணுகிறார்கள். இவர்கள் எழுதும் கொச்சைகட்கு வழக்கு மொழி அகராதி தயாரித்து வைத்தால் வருங்காலச் சந்ததி கிராமிய வழக்குமொழிகளை அகராதியிற் கண்டு அவைகளே சரியான சொற்கள் எனமயங்கும். தங்களது அகராதியினால் எவ்வித பயனும் இல்லை. பத்து ஆண்டுகளிற் தமிழ் அழிந்துவிடும்' என்று நீண்ட பிரசங்கமே செய்தார்.

அதைப் புன்முறுவலோடு கேட்டுக்கொண்டிருந்த கலாநிதி, வழக்கு சொற்கட்கான செந்தமிழ்ச்சொற்களும் அகராதியில் இருக்கும். அப்படியிருக்கும்போது பிழையான சொற்களைச் சரியான சொற்கள் என்று ஏன்மயங்க வேண்டும்? இப்படியாக ஒரு அகராதி இல்லாவிட்டாற் தான் வழக்குச் சொற்கள் செந்தமிழ்ச் சொற்களாக நம்பப்பட்டுக் காலகதியில் தமிழ்சீரழியும்" என்றுவிளக்கங் கொடுத்தார்.

சந்திப்பின் போதிருந்த பள்ளிக்குடியிருப்பு அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ம. இ. குருஸ் அவர்கள், "நாம் பாடசாலைகளில் உபயோகிக்கும் மொழிப் பயிற்சி நூல்களில் பிழையான சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான சரியான சொற்களையும் எழுதி வைத்திருக்கிறார்கள். பிள்ளைகள் அவற்றைப் பார்த்துத் தாம் பிழையாகப் பிரயோகிக்கும் சொற்களைத்திருத்திக்கொள்கிறார்களேயன்றி, பிழையான சொற்களை மனனம் பண்ணுவதில்லை என்பதை நாம்அனுபவத்திற் கண்டிருக்கிறோம். அதைப்போலவே இவ்வகராதியையும் பார்த்துச் சரியான சொற் பிரயோகத்தையே யாருந் தேர்ந்தெடுப்பர்" என்றார்.

தம் முந்தைய கருத்தையே வலியுறுத்தியவராக நீண்டநேரம் பேசிக் கொண்டேயிருந்தார் ஆசிரியர். அவரது நீண்ட பேச்சைக்கேட்டுக்கொண்டிருந்த கலாநிதி,

"அப்படியானால் தமிழை எப்படி வளர்க்கலாம் என்பதற்கு நீங்கள் வழிசொல்வீர்களா? எனக்கேட்டார்.

ஆசிரியர் மீண்டும் பேசத் தொடங்கினார்.

"திகடசக்கரம்என்றஇடத்தில் சற்றுக் குறும்பாக திகழ்+தசம் என்ற சொற்களைப் புணர்த்தியது போலவே நாமும் இரண்டு சொற்களை நம் விருப்பம் போலப் புணர்த்தினால் அதற்கு வீரசோழியத்திலும் விதி இல்லாவிட்டால் நம் மச்சானைப் போன்றோர் வேறொரு இலக்கண நூல் எழுதுவார்கள்தானே" என்றேன். (ஆசிரியர் வ. நீ. என்மைத்துனர்).

அவர் பேசி முடித்ததும் கலாநிதி றவ்வொடுகரவும்மை நிகழ்பலவும் . . . என்ற சூத்திரத்தைச் சொல்லி, இதைக் கீழ் வகுப்புகளிற் படிப்பிக்கலாம் என எண்ணுகிறீர்களா? இதைப்போன்ற சூத்திரங்களை நான் சர்வகலாசாலை இரண்டாம் வகுப்பு மாணவர்கட்குப் போதிக்கிறேன். சர்வகலாசாலைக்கு வருபவர்கள் எல்லோரையுமே செந்தமிழ்க் காரராக்கிவிட வேண்டும் என்பதுதான் என் விருப்பமும்" என்றார்.

ஆனால் ஆசிரியர் வ. நீ. அவர்களோ கீழ்வகுப்புக்களிலேயே நன்னூலை மனனம் பண்ண வேண்டும் என்று வாதித்தார்.

கீழ்வகுப்புகளில் நன்னூலை மனனம் பண்ணவேண்டும். என்ற கருத்தை எவருமே ஒப்புக்கொள்ளவில்லை. ஆசிரியர் குறிப்பிடும் சாகித்ய மண்டலத் தலைமைக்கும் கல்விக் கொள்கைக்கும் என்ன சம்பந்தமோ! கல்வி அதிகார சபையைக் கூட்டக் கலாநிதிக்கு அதிகாரமுண்டா? என்றெல்லாம் நாங்கள் எண்ணினாலும், அவருக்கு எதையுமே தெளிவிக்க எவராலுமே முடியாதென்பது எங்கட்குத் தெரிந்தது (கலாநிதியைத்தவிர.) எனினும்,

மரம்+பெட்டி, மரப் பெட்டி எனப் புணர்த்தவும் பிரித்து எழுதவும் தெரிந்திருந்தால் கீழ் வகுப்பிலே அதுவே போதும். அதற்காக 'மவ்வீறொற்றொழிந்து உயிரீறொப்பவும் வன்மைக்கினமாய்த்திரிபவமாகும்' என்ற சூத்திரத்தைப் பாடமாக்க வேண்டும் என்பது இக்காலத்திற் சாத்தியமில்லை. பட்டதாரி மாணவர்களும் ஆசிரிய மாணவர்களும் இலக்கணத்தை விரிவாகக் கற்றுக்கொள்ளட்டும்' என்றேன் நான்.

ஆயின் பாடசாலைகளில் இலக்கண அறிவு குன்றிவருகின்றது என்பதைப் பொதுவாக எல்லாரும் ஒப்புக் கொண்டோம்.

"அடுத்துச் சில பண்டிதர்களின் பேச்சு மிகக் கடுமையானது. அவர்கள் பேச்சை விளங்குவதென்றால் அதற்கு ஒரு தனி அகராதி வேண்டும்" என்று கலாநிதி சொன்னதாக திரு. வ. நீ. எழுதியிருக்கிறார்.

சம்பாஷணையின் எந்தக் கட்டத்திலும் பிராந்தியத் தமிழ பேசுவதுபற்றியோ, செந்தமிழ் பேசுவதுபற்றியோ எவருமே குறிப்பிடவில்லை. எழுதுவதைப்பற்றித்தான் பேசப்பட்டது.

சில பண்டிதர்களின் மிகவும் உயர்ந்த நடையில் எழுதுவதைக் கலாநிதி குறிப்பிட்டு எல்லாரும் விளங்கக்கூடிய நடையில் எழுதுவதே நல்லதெனக் கருத்துத் தெரிவித்தார்.

ஆனல் ஆசிரியர் வ. நீ. அவர்களோ, கலாநிதி பண்டிதத் தமிழ் பேசுவதுபற்றிக் குறிப்பிட்டதாகவும், அப்போது தான் இலங்கை வானொலி நாடகங்களிற் தான் பண்டிதத் தமிழ் பேசப்படுகிறதெனக் குறிப்பிட்டதெல்லாம் வெறும் கற்பனையே.

அடுத்து பாரதியைப்பற்றி அபிப்பிராயம் கேட்டபோது,

"பாரதிகூட ஆச்சுது போச்சுது என்று கொச்சை எழுதிவைத்திருக்கிறான். அப்பாடல்களைக் களைந்தெறிய வேண்டும் என்று என் ஆசை. ஆனாற் சமூகம் விடாதே" என்றார்.

போச்சுது, ஆச்சுது என்று பாரதியும் கொச்சை எழுதியதாகக் கலாநிதி குறிப்பிட்டதும், ஆசிரியர் வ. நீ. சற்று உணர்ச்சிவசப்பட்டவராகப் பேசத்தொடங்கினார்.

சுப்ரதீபன் 'அஞ்சாறு', 'தரிச்சிராது' என்றும், சீகாளத்திப் புராணத்தில் 'உழுந்து' என்றும், அருணகிரி

[8-ம் பக்கம் பார்க்க]

## சிறுகதை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தனின் சேட் பொக்கட்டிலே திரும்பவும் போட்டுவிட்டு அறையைவிட்டு வெளியே வந்தார்.

வாசலடி வேப்பமரத்திலிருந்து வந்து அவருடைய முகத்தில் வீசிய காற்று அவருக்குச் சுகமாக இருந்தது. விறாந்தையில் கிடந்த சாய்வு நாற்காலியில் போய் அமர்ந்துகொண்டு, பாதந் தாங்கிகள் இரண்டிலும் கால்களை நீட்டினார். அவருடைய உள்ளத்தில் எவ்வித பரபரப்பும் ஏற்படவில்லை. மாறாக, பரிமளத்தின் கடிதத்தில் காணப்பட்ட வாசகங்கள் மீண்டும் மீண்டும் அவரது அகக்கண் முன் தோன்றின.

'பரிமளம்! நீதான் எனது மருமகள்' - அவரது உள்ளம் அவரை அறியாமலே முடிவு கட்டியது.

தாயும் மகனும் வீடு திரும்பியபோது, அப்புக்காத்து சிவசுப்பிரமணியத்தார் அமைதியாகச் சாய்வு நாற்காலியில் உறங்கிக்கொண்டிருந்தார்.

[யாவும் கற்பனை]




சென்ற் அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 4261, 4261.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார சிறுகதை

# அந்தக் கடிதம்

மனோகரன் மயில்வாகனம்

அப்புக்காத்து சிவசுப்பிரமணியத்துக்கு அவரது இரண்டாவது மகன் ஒரு பிரச்னையாகி விட்டான். சிவானந்தனின் போக்கு அவருக்குப் புரியாதபுதிராக இருந்தது. அவன் மனதிலிருப்பதை அவரால் என்ன வென்று கண்டுபிடிக்கமுடியவில்லை. எத்தனையோ சிக்கலான 'கேஸ்'கள் எல்லாவற்றையும் தமது நுட்ப புத்திக் கூர்மையாலும், வாதத்திறமையாலும் சிக்க விழ்க்க முடிந்த அப்புக்காத்து சிவசுப்பிரமணியத்துக்கு, தனதுஇளையமகனின் போக்கை அறிந்து கொள்ள முடியவில்லை.

எஸ். எஸ். ஸி. வரைக்கும் சிவானந்தனைப் போல் சிவசுப்பிரமணியத்தாரின் மற்றப் பிள்ளைகள் யாருமே அவ்வளவு கெட்டித்தனமாகப் படித்ததுமில்லை, பாடங்களில் திறமையாகச் சித்தி பெற்றதுமில்லை. சிவானந்தனுக்கு முன் இரண்டு பெண்களும், ஒரு மகனும் இருந்தனர். ஆலாலசுந்தரம் மூத்தவன். அடுத்து பவானி, அதற்கடுத்தவள் சிவகாமி. பிறகுதான் ஆனந்தன். கடைக்குட்டி சுகுமாரி. ஆலாலசுந்தரமும் அப்புக்காத்தாகி, திருமணமும் செய்துவிட்டான். பவானியும் பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டு, டாக்டர் ஒருவரைக் காதலித்து மணம் முடித்துக் கொண்டாள். சிவகாமி பயிற்றப்பட்ட ஆசிரியை. ஆசிரியர் ஒருவருக்கு மாலையிட்டுவிட்டாள். ஆனால், இவர்களில் எவருமே கல்வியில் சிவானந்தனின் திறமைக்கும், இயற்கையாக அமைந்த புத்தி விவேகத்துக்கும் ஈடுகொடுக்க முடியாதுஎன்பது, தகப்பனார் சிவசுப்பிரமணியம் மட்டுமன்றி, குடும்பத்தினர் அனைவருமே ஒப்புக்கொண்ட ஒரு விஷயமாகும்.

அப்படிக் கெட்டித்தனமாகப் படித்து, வகுப்பில் முதலாவதாகத்தேறி, எஸ்.எஸ்.ஸி.யிலும் அதிகபாடங்களில் விசேஷசித்தி எய்தியபின், ஆனந்தன் படிப்பில் அக்கறை செலுத்துவதைக் குறைத்துக் கொண்டு வருவதை எல்லாராலும் உணர முடிந்தது. முதலில் இதை சிவசுப்பிரமணியத்தார் சரி, மனைவி அன்னலட்சுமி சரி அவ்வளவு தூரம் பெரிதாக எண்ணவில்லை. ஆனால், நாளுக்குநாள் சிவானந்தனுடைய அசிரத்தை அதிகரித்துக் கொண்டுவருவதையும், அடிக்கடி ஏதாவது சாட்டில் வீட்டை விட்டு வெளியே திரிந்து விட்டு, நேரம் தாழ்த்தி வீடு திரும்புவதையும் அவதானித்த பெற்றோருக்கு மனக்கவலையும், அவனுடைய எதிர்காலம்பற்றிய பயமும் ஏற்படத் தொடங்கின.

பல்கலைக்கழகப் பிரவேச வகுப்பில், முதல்வருடத் தேர்வில் ஆனந்தன் சித்தி பெறத்தவறிவிட்டான். அப்போதுதான் சிவசுப்பிரமணியத்தார், முதல் முறையாகக் கண்விழித்தார். மகனைக் கூப்பிட்டு விளக்கம் கேட்டார். அவனோ தான் தன்னால் இயன்றவரை செய்ததாகவும், பரீட்சையில் தான் முற்றிலும் எதிர்பாராத சில கேள்விகள் வந்ததால், தான் தேறத் தவறிவிட்டதாகவும் கதை அளந்தான். சிவசுப்பிரமணியத்தார் அவ்வளவோடு விட்டுவிட்டார். மேலும் அவனைக் குறுக்கு விசாரணை செய்ய அவர் விரும்பவில்லை.

ஆனந்தனுடைய நடமாட்டங்களையும், நடவடிக்கைகளையும் அவனுக்குத் தெரியாமலேயே கண்காணிக்கத் தொடங்கினார். தனது பிள்ளைகளின் அந்தரங்கஅலுவல்களில் ஈடுபடுவதையோ, அவற்றைத் துப்புத்துலக்க முயல்வதையோ இதுவரை சிவசுப்பிரமணியத்தார் விரும்பியதில்லை. ஒவ்வொரு பிள்ளையும் தனது வாழ்க்கையைத் தான் விரும்பியபடி சுதந்திரமாக நடாத்தவேண்டும் - ஆனால், படிப்பிலோ நடத்தையிலோ பிழை ஏற் [illegible] டும் என்பதுதான் அவருடைய கொள்கை. ஆனால், ஆனந்தனின் போக்கு, அவரை அவரது கொள்கையிலிருந்து விலகி, அவரது பிள்ளையையே கண்காணிக்க வைத்துவிட்டது, அவருக்கே மனதுக்கு வேதனையாகவிருந்தது. கசப்பென்றாலும்செய்ய வேண்டிய கடமையாச்சே என்ற காரணத்தால், சிவசுப்பிரமணியத்தார் ஆனந்தனின் நடவடிக்கைகளை அவதானிப்பதில் இறங்கினார்.

ஒருநாள், ஆனந்தன் தாயுடன் உறவினர் வீடொன்றுக்குச் சென்றிருந்தான். அவர்கள் இருவரும் திரும்பிவர சில மணித்தியாலங்களாவது ஆகுமென்பதைத் தெரிந்த சிவசுப்பிரமணியத்தார், ஆனந்தனின் அறைக்குள் சென்றார். சுற்று முற்றும் பார்த்தார். பாடப்புத்தகங்கள் வேறாகவும், சஞ்சிகைகள், நாவல்கள் வேறாகவும் மேசையில் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. உடுப்புகளும் அவற்றுக்குரிய துணி தாங்கியில் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தன. எதிலுமே, ஆனந்தன் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவன் என்பது சிவசுப்பிரமணியத்தாருக்குத் தெரியாத விஷயமல்ல. அது அவரது மனதிற் பட்டதும். லேசாக நகைத்துக்கொண்டார்.

ஆனந்தனின் அறையில் ஒரு சிறிய அலுமாரி இருந்தது. அது அவனுடைய சொந்தக் கடிதங்கள், படங்கள், வேறு பல பொருள்கள் அடங்கியது. அதற்கு அவனிடமே சாவி இருந்தது. தான் நினைத்த நேரம் மாத்திரம் திறப்பான். மற்றும்படி அது பூட்டியே இருக்கும். அந்த அலுமாரி ஆனந்தனின் விசித்திர நடத்தைக்கான காரணத்தைத் தன்னுள் புதைத்திருக்குமோ...? ஆனால் சாவி?

சிவசுப்பிரமணியத்தார் வெட்கமில்லாமல் ஆனந்தனின் 'சேட் பொக்கெட்டு'களை எல்லாம் துழாவினார். கடைசியில் அவர் தேடியது அவர் கையில் தட்டுப்பட்டது. செய்யத்தகாததைச் செய்வதுபோன்ற குறுகுறுப்பு, மனதில். 'சே! இதென்ன இது? மகனின் நன்மைக்காகத் தந்தை அவனுடைய அலுமாரியைத் திறந்து பார்ப்பதில் என்ன தவறு? முதலில் அலுமாரியில் ஏதாவது இருக்கப் போகிறதோ, என்னவோ... அதுவே இன்னும் தெரியவில்லையே? அதைப் பார்ப்போம்' - இவ்வாறு மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு, சிவசுப்பிரமணியத்தார் அலமாரியைத் திறந்தார். உள்ளே இருந்த பொருட்களை எடுத்து ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு சென்றபோது, ஒரு மூலையில் ஒரு புத்தகத்தடியில் ஒரு கடிதம் அகப்பட்டது.

சிவசுப்பிரமணியத்தார் அக்கடிதத்தைக் கையிலெடுத்தார். உறையின்மீது பொறிக்கப்பட்ட, அழகான வட்ட வட்டமான எழுத்துக்கள், அவை ஒரு பெண் கைப்பட எழுதப்பட்டவை என்பதைப் பறைசாற்றின. அதைக் கண்டதுமே சிவசுப்பிரமணியத்தாரின் மனம் ஒரு கணம் துணுக்குற்றது. கைகள் படபடக்கக் கடித உறையினிலிருந்து கடிதத்தை வெளியில் எடுத்தார்.

எனது அன்பும் உயிருமான ஆனந்தனுக்கு,

எமது தூய்மையான காதல் விவகாரம் மற்றவர் எவருக்கும் தெரியக்கூடாத பரம இரகசியமாக இருக்க வேண்டுமென்ற காரணத்தால், கடிதத் தொடர்பே வைத்துக்கொள்வது இல்லை என்ற எங்களது உடன்பாட்டை மீறவேண்டியுள்ளதே என்பது எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. என்றாலும், இதை எழுதாவிட்டால் எனது மனம் ஆறுதலாக இருக்க முடியாது. என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும்.

சுகவீனம் காரணமாக நான் இவ்வருடம் பெரும் பகுதி கல்லூரிக்கு வரமுடியவில்லை என்பதனால், இவ்வருடப் பரீட்சையில் நான் தேற முடியாது என்பது உங்களுக்குத் தெரிந்திருந்ததில் எனக்கு ஆச்சரியமில்லை. ஆனால், நானும் நீங்களும் ஒருமித்தே பல்கலைக்கழகம் புகவேண்டுமென்ற உங்கள் தீராத விருப்பத்துக்கு, உங்கள் எதிர்காலத்தை இப்படிப் பாழாக்குவீர்கள் என நான் சற்றும் உணரவில்லை. வேண்டுமென்றே படிப்பைக் கவனியாது விட்டு, பரீட்சையில் கோட்டைவிட்டிருக்கிறீர்கள். இது உங்களுக்கே நியாயமா? இதுவரை காலம் திறமைசாலி எனப் போற்றப்பட்ட நீங்கள், பெற்றோர், குடும்பத்தினரிடையேயும், கல்லூரி வட்டாரங்களிலும் உங்கள் நற்பெயரை இப்படிக் கெடுத்துக்கொள்வது, எனக்கு ஏதோ மகிழ்ச்சி தந்துவிடும் என நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை.

ஓர் ஆண், ஒரு பெண்மீது அன்பு வைப்பதில் தவறில்லை. ஆனால், விபரீதமான ஆசைகளையும், விபரீதமான போக்கையும் வளர்ப்பது அந்த அன்புக்கு இடையூறாக அமைவதுடன், விபரீதமான முடிவையும் ஏற்படுத்தலாம்.

நாம் ஒன்றாகவே பல்கலைக்கழகத்தில்சேர்ந்து படிக்க வேண்டும் என்ற உங்கள் வாதத்தைத் தொடர்ந்தால், தற்செயலாக நான் அடுத்த வருடமும் பரீட்சையில் தேறுவிடில், மீண்டும் நீங்கள் இதேவிபரீதப்போக்கைக்கடைப்பிடிப்பீர்களோ? அப்படியானால், இது எங்கே சென்றுமுடியும்? உங்களுடைய இந்தப் போக்குக்கு நான் உதவிசெய்தால் அல்லது உற்சாகம் அளித்தால் உங்கள் எதிர்காலத்தை நாசமாக்கிய பழிகாரியாவேன்.

நான் உங்களைக்கேட்டுக் கொள்வது ஒன்றுதான். மீண்டும் முன்னர்போல் திறமையாகப்படியுங்கள். வகுப்பில் முதலாவதாகத்தேற முயற்சி எடுங்கள். உங்கள் முன்னேற்றத்தில் தான் எனது வாழ்வும் தங்கியுள்ளது என்பது நான் சொல்லித்தான் உங்களுக்குத்தெரியவேண்டுமா?

ஆனால் ஒன்றுமட்டும் கூறுகிறேன். நான் பல்கலைக்கழகத்தினுள்பிரவேசித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நான் உங்களுக்கே உரியவள் உங்களையேகாத்துநிற்பேன். என்னிடம்-எங்கள் குடும்பத்திடம்-உங்களுக்கேற்ற சீதனம் தரக்கூடிய பொருள், பண்டம்இல்லையென்பதுஉங்களுக்குத்தெரிந்ததே. ஆனால் தூய்மையான உள்ளம்இருக்கிறது. கலப்பற்ற அன்பு இருக்கிறது. அவையும் என்னுடன் உங்களுக்காகக் காத்திருக்கும்.

நான்இன்னும் இரு வாரங்களில் மீண்டும் கல்லூரிக்கு வருவேன் என நம்புகிறேன்.

அதுவரை உங்கள் அன்பையேஇதயத்தில்புதைத்து வைத்துக்கொண்டிருக்கும்,

உங்கள் அன்புக்குரியவள்,

பரிமளம்.

கடிதத்தைவாசித்துமுடித்ததும் அப்புக்காத்து சிவசுப்பிரமணியத்தாரின் இதயத்திலிருந்து ஆழமான பெருமூச்சொன்று ஆறுதலாக வெளிப்பட்டது. அவரது முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தோன்றவில்லை. சலனமற்று, அமைதியாகவிருந்தது. கடிதத்தை உறையினுள்போட்டு, இருந்தஇடத்திலேயே பவித்திரமாக வைத்துவிட்டு அலுமாரியைப்பூட்டி, சாவியை ஆனந்

[4-ம் பக்கம் பார்க்க]

# புதிய உயிர்

— முனியப்பதாசன் —

இருள் கெடுகிறது. காலை விரிகிறது. கீழ்த்திசையில் வர்ணபேதங்கள். ஒளிக்கற்றைகள். ஒளிச்சுடரில் பொய்யும்மெய்யும் கலந்த பிரபஞ்சத்தின் பிறப்பு. வஞ்சனையும் கயமையும் கலந்த கலப்பு. சிருஷ்டியின் பேதங்கள். புலனுக்குப் புலப்பட்டும் புலப்படாமலும், அறிவிற்கு எட்டியும் எட்டாமலும், இருதயத்தைத் தொட்டும் தொடாமலும் பிறக்கும் இசை ஒலிகள். அழுகுரல்கள். சின்னதுகள். பெரிதுகள்.

காகம் கரைகிறது. சிருஷ்டியின் கிறலா? கறவை மாடு கத்துகிறது. சிருஷ்டியின் தாய்மையும் தியாகமுமா? மண்புழு நெளிகிறது. எது சேவை?

பிரபஞ்சமே கலவைதானே? புதிய கலவை. மனிதன் கலந்தால் ஒரே மாதிரி இருக்கும். இது புதிய கலவை? நேற்றிருந்தாற்போன்று இல்லையே? நேற்றும் இன்றும், நாளையும், அதுமட்டும் என்ன? மனிதனின் காலக் கலவை? திங்கள், செவ்வாய், புதன்-மாதம் வருடம்—நிமிடம் மணி நாள்... மனிதக் கலவை? கீறலாய்த் தெரிகிறதே?

புதிய கலவை விரிந்துகொண்டிருக்கிறது.

மலரொன்று விரிகிறது.

பார்த்தபடியே நிற்கிறேன். மலர் மட்டும் கலவையில்லையா? புலனாகாத அணுக்களின் கலவை. பார்வைமட்டும் என்னவோ? அதுவும் கலவைதான். கலவையிற்கலவை. பிரபஞ்சமே அதுதானே?

முகை அவிழ்கிறது. இதமாய் மணம் மூக்கில் ஏறுகிறது.

ஏறுகிறதா? ஏறுகிறதுபோல ஒருதோற்றம். ஓர் எண்ணம். எண்ணம் மட்டுமென்ன? கலவைதானே?

நேற்றிருந்தவன், அதற்கு முந்தி, அதற்கும் முந்தி- பேசியும் பேசாமலும் காட்டிய, பேசிய, செய்தவைகளின் தொகுப்புத்தானே? அதுவும் கலவைதான். அவன் இல்லாவிட்டால் நானில்லை. என் எண்ணமில்லை.

ரசித்தபடியே நிற்கிறேன். எண்ணம் விரிகிறது.

மகள் நட்டமரம். முந்திய நாள் அரும்புசிறிதாய்க் கட்டியிருந்தது. உயிர் தோற்றம். பால்யம். பூ என்கிற யௌவனத்தின் பால்யம். சிறு குழந்தை. மொத்தக்கலவையின் ஆரம்பக்கலவை. பருவம்.

அவ்வளவுதான்.

பார்த்துக் கொண்டிருக்கிறபோதே பொல பொல வென்று இதழ் விரித்து மணம் பரப்பி... இப்போது பூ. பூத்தான். பூவேதான். என்ன அழகாய்ச்சிரிக்கிறது.

இது எங்கிருந்தது? எப்போது வந்தது? நெற்றாய் இருந்து - நெற்றுள் இருந்து-வெளிக்கிளம்பத் துடித்து, அதன் ஓயாத பிரார்த்தனையில் மண்ணில் விழுந்து அமிழ்ந்து மாரிபெய்து முளையாய்ச் செடியாய் மரமாய்... அதுவும் பூக்கிறதே?

யௌவனம். யௌவனம். யௌவனம் தானே.

நடுப் பகல் தாண்டி மாலை வந்தது.

பூ சோர்ந்துபோய் நிற்கிறதே?

கலவை மங்கத்தொடங்கிவிட்டதே? ஆங்கிலக்கவி ரெனிசன் இவற்றை வரைய்றுத்தானுமே! நிழல்கள் என்று? நிழல் மங்குகிறதா? உருவமில்லாமல் நிழலா? உருவமே- நிழலே-கலவையே மங்குகிறதே?

முதுமை. முதுமை. தள்ளாத முதுமைதானே?

கீழ்த்திசையில் ஞாயிறு மறுநாள் சுடர் பரப்புகிறது.

புதிய கலவை. புத்தம் புதிய கலவை? கலவையா? வேறு என்ன?

அதே மரம்.

பூ காம்பு கழன்று சோர்ந்துபோய் மண்ணில்கிடக்கிறது. அதே மரத்தில் நேற்றுப் பூத்தாற்போல வேறு ஒரு பூ, பளிச்சென்று சிரிக்கிறது. அதன் 'ஆத்[illegible]' இதில் சிரிக்கிறதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. பி. எச். —— எழுதும்

## யாத்திரைக் கடிதங்கள்-2

**அன்புள்ள சரஸ்,**

எனது பத்திரிகை வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது எனக்கு ஓர் அருமை சுலோகம்தான் நினைப்புவருகிறது. என்ன தெரியுமா? ''மூகம் கரோதி வாசாலம், பங்கும் லங்கயதே கிரிம், யத்கிருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம்'' (அதாவது யாருடைய கிருபையிருந்தால், ஓர் ஊமையும் சண்டப்பிரசண்டனுவானே, முடவனும் மலைகளைத் தாண்டுவானே அப்பேர்ப்பட்ட பரமானந்த மாதவனுகிய இறைவனை வணங்குகின்றேன்) என்பதுதான்.

பத்திரிகைத் தொழிலுக்கு வேண்டிய எவ்விதமான தகுதியும் எனக்கில்லை. அதிலும் தமிழ்ப் பத்திரிகைப் பணிக்கான அறிவாற்றல் சிறிதும் கிடையாதென்பது உனக்குத் தெரியும். வீட்டிலே நாம் பேசும் மொழி தெலுங்கு. தெலுங்கு பேசுகிறவர்கள் எப்படி தமிழகத்துக்கு வந்தனரென்று கேட்கிருயா? சொல்லுகிறேன் கேள். ஐந்து அல்லது ஆறு நூற்றுண்டுகளுக்குமுன் நாயக்க மன்னர்கள் விஜயநகரத்தைத் தலைநகராகக் கொண்டு செங்கோல் ஒச்சிய காலத்தில், தஞ்சாவூர், மதுரை முதலிய சோழ, பாண்டிய பகுதிகளிலும் அவர்களது ஆட்சி நிலவியது. அவர்களது ஆதரவுடன் பல ஆந்திர குடும்பங்கள் தமிழகத்துக்கு வந்தனவாம். அப்படி வந்தவர்களுள் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் மூதாதையரும், நமது மூதாதையரும் நெருங்கிய உறவினரென்றும், இன்னும் பல குடும்பங்களுடனே அவர்கள் தஞ்சாவூரிலே திருவாரூர், திருவையாறு முதலிய பல பகுதிகளில் குடியேறி வசித்ததாகவும் கேள்விப்பட்டேன். வேருெரு கதையும் உண்டு. வடக்கே ஆந்திர நாட்டிலே 'கலாபம்' என்ற படையெடுப்புக் கலவரங்கள் நடந்தபோது, நமது மூதாதையர் தமிழகத்திலே தஞ்சாவூரிலே தஞ்சம் புகுந்ததாயும் கேள்வி. ஆனுல் தஞ்சை அரண்மனையிலே நமது பெரியோர்கள் குருமார்களாக இருந்த காரணத்தால் சில நிலங்களும், வீடும் மான்யமாகக் கிடைத்ததென்றும். திருவையாற்றிலுள்ள நமது பழையவீடும் அப்படிக் கிடைத்ததே என்றும் எனது பாட்டியார் கூறுவார். அரசரின் சன்மானம் கிடைத்துள்ளதால், மன்னர்களின் அழைப்பின்மீதே அவர்கள் தமிழகத்துக்கு வந்திருக்கலாமென்று தோன்றுகின்றது. காரணம் எதுவாயினும், மொழிவேற்றுமைகள் என்ன இருப்பினும், அக்குடும்பங்களெல்லாம், வீட்டிலே தெலுங்கு மொழியே பேசினும், தமிழர்களுடன் சேர்ந்து பாலில் சீனி கலந்ததுபோல் வாழுவதை இன்றும் காணலாம். அதுமட்டுமல்ல, அப்படித் தென்னகத்தில் குடியேறிய பல வடுகர்கள் தமிழ் கற்று தமிழுக்குப் பல பல இலக்கியப்பணிகளும் செய்துவருவதை இன்றும் பார்க்கிருேம். சுவாமி சுத்தானந்த பாரதியார், புகழ்பெற்ற சிறுகதையாளர் பிச்சமூர்த்தி முதலிய பலரின் தாய்மொழி தெலுங்குதான் என்பதை அறிய உனக்கு வியப்பாக இருக்கும்.

தமிழகப் பள்ளிகளில் தெலுங்கு கற்பிப்பதில்லை. அதனுல் நம் வீட்டவர்களுக்கு தெலுங்கு எழுதப் படிக்கத் தெரியாது. பேசுவதுமட்டும்தான். ஐந்து வயதில் படிக்கவைத்தபோது, திருவையாற்றிலேயுள்ள சம்ஸ்கிருத கல்லூரிக்கு என்னை அனுப்பவேண்டுமென்றும், பாட்டனுரைப்போல சாஸ்திரங்கள் கற்று புகழடையவேண்டுமென்றும் என் பாட்டியார் விரும்பினுராம். ஆனுல் அந்தப் படிப்பு இக்காலத்துக்கு சரிப்படாதென்றும், ஆங்கிலம் கற்றுல்தான் பயனுண்டென்றும் என் தாய்மாமனுர் சொல்லி, ஆங்கிலப் பள்ளியில் என்னைச் சேர்த்துவிட்டார்.

திருவையாற்றிலே காவிரிக் கரையோரம், அழகான பெரிய கட்டிடங்களைப் பார்த்திருக்கிருயல்லவா? அவைதான் சரபோஜி (தஞ்சையை ஆண்ட கடைசி மகாராஷ்டிர மன்னர்) செய்துள்ள வித்யாதானம். அங்கு மாணவர்களுக்கு சமஸ்கிருதமும் சாஸ்திரங்களும் இலவசமாகக் கற்பிக்கவும், அங்கு மாணவர் வசித்து, இலவசமாகச் சாப்பிடவும், ஏராளமான மான்யம் விட்டிருக்கின்ருர். பழைய மன்னர்கள் ஆட்சியிலே இலவசக் கல்வி இலவச உணவு, இலவச இருக்கை எல்லாம் எப்படி வழங்கினரென்பதற்கு அக்கல்லூரி இன்றும் ஓர் அடையாளமாக இருக்கிறது. பல பல மாறுதல்கள் இடையே ஏற்பட்டிருப்பினும், அந்த தர்மம் அழியாமல் நடக்கின்றது. கேரளம் முதலிய பல தூர இடங்களிலிருந்தும் கல்வி கற்க அங்கு பலர் வருகின்ருர்கள். அக்கல்லூரி ஜில்லா போர்டு நிர்வாகத்துக்கு வந்தபின், தீவிரமாறுதல் ஏற்பட்டதுடன், நாத்திகத்துக்கு மூலஸ்தானமாகி விட்டதாயும் ஒரு புகாருண்டு. இது எப்படியாயினும், என்பாட்டியார்கூறியபடி அக்கல்லூரியில் என்னைச் சேர்த்திருப்பின் என் வாழ்க்கையும், தொழிலும் முற்றிலும் வேறு வழியில் திரும்பியிருக்கும். ஆங்கிலம் தெரியாவிட்டால் தினசரிப் பத்திரிகையில் இடமேது?

ஐந்தாம் வகுப்புவரையில்தான் தமிழ் ஒரு பாடம். பின்னர் சமஸ்கிருதத்தை இஷ்டபாடமாக எடுத்தேன். 9-ம் வகுப்பில் கணக்கு, விஞ்ஞானம், தமிழ் மொழி பெயர்ப்பும் கட்டுரையும் ஒருபாடம். இச் சமயத்தில் ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. திருச்சி செண்ட் ஜோசப்ஸ் கல்லூரியிலே ஒன்பதாம்வகுப்பில் சேர்ந்த முதல் நாளன்று, மொழி பெயர்ப்பு ஆசிரியர் ஒரு கேள்விகேட்டார். ''ஊசியின் காது ஒடிந்து போயிற்று'' என்பதை ஆங்கிலமொழியில் பெயர்க்குமாறு கேட்டதற்கு, எனக்கு முன்பிருந்த சில மாணவர்கள், ''The ear of the needle is broken'' என்று கூறினர். எனது முறை வந்தது என்னையும் அறியாமல் ''The eye of the needle is broken'' என்று சொல்லிவிட்டேன். கடைசியாக பலரையும் கேட்டுக் கொண்டே போனுர் ஆசிரியர். பின்னர் என்னை மட்டும் எழுந்திருக்கச் சொல்லி, ''இப் புதிய மாணவன் கூறியதுதான் சரி. தமிழில் ஊசியின் 'காது' என்பது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போது 'கண்' என்று மாறி விடுகிறது. இது ஒவ்வொரு மொழிக்குமுள்ள தனிச் சிறப்பு'' என்று கூறி என்னைப்பாராட்டினுர். உண்மையில் இந்த வேற்றுமையெதுவும் எனக்குத் தெரிந்து சொல்லவில்லை. முதல்நாள் கிடைத்த பாராட்டு எனக்கு புதிய தைரியமும் உற்சாகமுமளித்ததென்ருலும், என் வாழ்க்கை ஒரு மொழி பெயர்ப்பாளனுக இருக்கப் போகிறதென்பதை அப்போது சிறிதும் நினைக்கவேயில்லை. தமிழ்தினசரிப் பத்திரிகையிலே உதவிஆசிரியர்களின் வேலையெல்லாம் பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்பதுதான்.

உயர்தரக்கல்வியில் தமிழ் இலக்கண இலக்கியம் படிக்கவில்லை. பி. ஏ. வகுப்பிலும் பௌதிக விஞ்ஞான பாடத்தை எடுத்தேன். இஞ்சினீயராக வரவேண்டுமென்றே வீட்டில் விருப்பம். கல்லூரியில் தமிழ் கற்க சிறிதும் வாய்ப்பில்லை. தமிழறிவே சிறிதுமற்ற ஒருவனுக்கு 40 வருடகாலம் தமிழ்ப் பத்திரிகை உலகில் தொண்டாற்றவும், நாவலர் பிறந்த பொன்னுட்டுக்கு வந்து இருதமிழ்ப்பத்திரிகைகளின் ஆசிரியப்பொறுப்பும் கிடைப்பதாயின், அதைப் பற்றி என்ன சொல்லுவது? தமிழறிவு சிறிதுமற்ற என்னை தமிழ்ப் பத்திரிகை உலகிலேஇவ்வளவுகாலமாக வைத்து ஓட்டிவருவது ஒரு வியப்பல்லவா? ஊமையையும் சண்டப்பிரசண்டனுக்கவும் முடவனையும் மலையைத் தாண்டும்படி செய்யவும் அந்தக் கருணுமூர்த்தியால் முடியும் என்பதற்கு என் பத்திரிகை வாழ்க்கையை விட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்? இதை நினைக்க நினைக்க, என் உள்ளம் உருகுகிறது சரஸ்! ஒன்றுக்கும்பற்ருத என்னை இப்படியெல்லாம் ஆட்டி வைக்கும் அந்தத் திருவருளின் கருணைக்குப் பாத்திரமாக என்ன செய்தேனென்பது புரியவில்லை.


உன் அன்புள்ள,

**அப்பா.**


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டரின் பிரபலமான மொடல் சகாயமான விலைக்கு உண்டு

REX-ROTARY

M 2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினுல், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனுல்தான் எம்—2 இன் விலைக்கு அது விசாலிக் கல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்மதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்

(OFFICE EQUIPMENT LTD.)

ஐலண்ட் கட்டிடம், கொழும்பு—3

தொலைபேசி: 6168 தந்தி: ஆபீஸ்எம்ட


## காலம் மறக்காத கவிஞ

தமிழ் பிறந்த பொதிய மலையைத் தன்னகத்தே கொண்டிருக்கும் திருநெல்வேலி மாவட்டம், வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கடல் கொண்ட தமிழ் நாடாம் குமரிக் கண்டத்திலிருந்து வந்த மக்கள், கரையேற வாய்ப்புத் தந்தது அந்த மாவட்டமே. சங்க காலத்தில் சில காலம் பாண்டியருக்கும், சிலகாலம் சேரருக்கும், எல்லைப் பகுதியாக மாறி,மாறிப் பல போர்க்களங்களைச் சந்தித்த பகுதி அது. பின்னர், களப்பிரர் ஆட்சிக்குட்பட்டு, பாண்டியரால் மீட்கப்பெற்று, இடைக்காலச் சோழராட்சியின் கீழ் வந்து, மீண்டும் பாண்டியர்கைக்குச்சென்று, அதன்பின்னர் மொகலாயரின் அடக்குமுறைக்கு ஆளாகி, ஏறத்தாழநானூறு ஆண்டுகள் அரசியல் குழப்பங்களில் சிக்கி அலைவுற்று, பின்னர் விஜயநகரமன்னரின் பிரதிநிதிகளான, தெலுங்கு, நாயக்க மன்னர்கள் ஆட்சியில் பல பாளையப் பாட்டுகளாகப் பிரிக்கப்பட்டு, நாளடைவில் அப் பாளையப் பட்டுகளும், பெரும்பான்மை ஆற்காட்டு நவாப்பின் கண்காணிப்பில் அடங்கி, ஒவ்வொரு நூற்ருண்டும் புதிய புதிய ஆட்சியமைப்பையும், போராட்டச் சூழலையும் சந்திக்க நேரிட்டு, வரலாற்றின் பல திருப்பங்களையும் சுவையாக

மாவிட்டபுரம்-கீரிமலை தீர்த்த யாத்திரைப் பாதை இருள் அடைந்து புதர்மண்டிப்போயிருப்பதாக காலச் சக்கரத்தில் 'கதிரவன்' எழுதிய குறிப்பை வாசித்துவிட்டு ஒரு நேயர் எழுதுகிருர்:.

தாங்கள் எழுதியது மெத்தச்சரி. இந்தப்பாதை தீர்த்த யாத்திரைப்பாதையாக மட்டுமன்றி, நீரூற்று, சுகவாசத் தலம், தொழிற்சாலைவட்டாரம்,பஸ்போக்குவரத்து என்பனவற்ருலுமே நாளுக்கு நாள் முக்கியத்துவம்பெற்று வருகிறது. மின்சார வெளிச்சம் போட்டிருந்தும் அது நிறை பூர்த்தியடையாததினுல் புதர்பற்றை அடர்ந்த மலைமேட்டுப் பக்கமாக பாதை ஒரே இருளடைந்து சன நடமாட்டத்துக்குப் பாதுகாப்பு அற்றதாகவே உள்ளது. சென்ற மகாசிவராத்திரியன்றுமாலை மாவிட்டபுரம் திரும்பியசுவாமியுடன்கூட கீரிமலையிலிருந்து நானும் வந்தேன். ஏனே அன்றுநாலுமணிக்கேசுவாமி எழுந்தருளினுர். ஒரு காலத்தில்இதேயாத்திரைப்பாதையில் மாவிட்டபுரம் கோவிலுக்கு அணித்தாகக் குடியிருந்தஒருநாதசுரக்காரர் ஒரு தினம் தன் வீட்டில் விளக்கேற்றி நாதசுரம் வாசித்துக் கொண்டிருந்தபோது. அவர் வீட்டுத்தென்னேலைத் தட்டியில் ஒரு குட்டிப்பாம்பு பக்

## மயிலே!

**— சாரணகையூம் —**

மயிலே மயிலே வாராயோ
மனதிற் கின்பந் தாராயோ
குயிலின் கீதத் தோடாட,
கோல மயிலே வாராயோ!

ஆயிரங் கண்ணுந் தோகையிலே
ஆடித் திரியும் போதினிலே
வேயின் குழலால் பாட்டிசைப்பேன்
வந்தென் னெதிரில் ஆடாயோ!

கூடிய கரிய மேகமதை(க்)
கண்டா லாடிக் களிக்கின்ருய்,
பாடிய என்றன் பாட்டினிலே,
பரவச மேனே உனக்கில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ...ாத கவிஞன் — II

வருணிக்கும் பகுதியும் அதுவே!

எட்டயபுரம், பாஞ்சாலங்குறிச்சி, நெற்கட்டும் செவ்வல் முதலிய பல பாளையப்பட்டுகள், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தன. இவை கிழக்குப் படாகை, மேற்குப்படாகைப்பாளையப்பட்டுகள் என இரு கூறுகப் பிரிந்திருந்தன. கிழக்குப் படாகைப் பாளையக்காரர்களெல்லோரும் தெலுங்கு நாயக்கர்கள். மேற்குப்படாகைப் புறத்தாருள் பெரும்பாலோர் மறவர்கள். கிழக்குப் புறத்தாருக்குத்தலைமை வகித்தவர் கட்டபொம்மு. மேற்குப் புறத்தாருக்குத் தலைமை வகித்தவர் புலித்தேவர்.

''ஆனுல் நாட்டுக்கு யார் உண்மையிலேயே அதிகாரி என்பது உறுதிப்படவில்லை. பாளையக்காரர் தம்முள் ஒன்றிச் செயல்பட வழியும் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஆங்கிலேயருடைய உதவி தேடப்பட்டது. ஆர்க்காட்டுநவாபு தம்தேவைக்கு வேண்டிய பணத்தை ஆங்கிலேயரிடமிருந்து முன்கூட்டியே கடன் வாங்கியிருந்தார். ஆகவே 1792-இல் இவர்களிடையே ஓர் உடன்படிக்கை நிகழ்ந்தது. அதன்படி பாளையப் பட்டுகளின் கப்பப்பணம் முழுவதையும் நவாபின் கடனுக்காக ஆங்கிலேயரே வசூலித்துக் கொள்வதென்று ஏற்பாடாயிற்று. ஏற்கெனவே நெல்லிக்காய்கள்போல் சிதறுண்டு கிடந்த பாளையக்காரரை வெள்ளையர்கள் இப்போது தங்கள்அரசியல்விளையாட்டின் பகடைக்காய்களாகப் பயன்படுத்திக் கொண்டனர்.'' [நாமிருக்கும் நாடு-பக்கம் 241]

ஆங்கிலேயருக்குக் கப்பம் செலுத்த எட்டயபுரம் மன்னர் முதலானோர் உடன்பட்டாலும், பாஞ்சாலங்குறிச்சிப் பகுதியை ஆண்ட வீரபாண்டிய கட்ட பொம்மன்

# பாரதி பிறந்தார்

அதனை வெறுத்து எதிர்த்தார். ஆயினும், ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டு ஒருசில பதவிகளைப் பெற வேண்டுமென்ற நப்பாசையில் ஈடுபட்ட புதுக்கோட்டை, எட்டயபுரம் மன்னர்களின் வஞ்சனையால் அவர் காட்டிக்ககாடுக்கப்பட்டு 1799 அக்டோபர் திங்கள் கயத்தாற்றிலே, ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார். பாஞ்சாலங் குறிச்சியின் சில பகுதிகள், எட்டயபுரம் மன்னருக்குப் பரிசாக வழங்கப்பட்டன.

கட்டபொம்மனது உடன்பிறந்தவரான ஊமைத்துரையும் அவருக்கு ஆதரவாக இருந்த சிவகங்கை மருதுசகோதரர்களும் 1801-ம் ஆண்டு இறுதியில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டனர். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டஅதே ஆண்டு ஆங்கில ஆட்சிக்கு முடிவுகட்ட, மைசூர்ப்பகுதியில் போராடிய திப்புசுல்தானும், சீரங்கப்பட்டணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆண்டு வந்த பெருமன்னர்களிடம், வாணிகச்சலுகை பெற்றும், குறுநில மன்னரிடையே, ஒருவருக்கொருவர் பூசலை மூட்டிப் போராடவிட்டும், எதிர்த்த மறவர்களை எவ்வாறேனும் அழித்தும், ஆங்கிலேயர் இந்தியாவின் பல பகுதிகளைத் தங்கள் ஆளுகையின்கீழ் கொணரத்தலைப்பட்டாலும், இந்தியப்பண்பாடும், சுதந்திர உணர்ச்சியும் கொண்டவர்கள், அயலவர் ஆட்சியை முறியடிக்க அவ்வப்போது கிளர்ந்து எழவே செய்தனர்.

### சிப்பாய்க்கலகம்

1857-ல் நடந்த சிப்பாய்க் கலகக்கிளர்சியை அடக்க ஆங்கிலேயர் மேற்கொண்ட அடக்குமுறைக் கொடுமைகள், மக்களிடையே பெருங் கசப்பைத் தோற்றுவித்தன. சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் இந்திய நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்ற, ஆங்கிலேயர் சில புதுமுறைகளைக் கையாண்டனர். 'சீர்கேடான ஆட்சிமுறையுள்ள நாடுகள்' எனச் சிலவற்றையும், 'சந்ததியில்லாத அரசுகள்' எனச் சிலவற்றையும் தம் கம்பெனிப்பகுதிகளோடு இணைக்கத்தலைப்பட்டனர். சுவீகாரத்தைக் கூட அனுமதிக்காது, தன்ஆட்சிப் பகுதியை ஆங்கிலேயர் பறிமுதல் செய்ததை, ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய் கடுமையாக எதிர்த்ததோடு, களத்தில் நின்று போராடவும் துணிந்தனள்! நாடிழந்த மன்னர்களும், உபகாரச்சம்பளம், பட்டம், பதவி முதலியவற்றை இழந்த அரசர்களும், மனக்கொதிப்படைந்தமறவர்களும், மதப்பற்று மிக்க மக்களும் ஆங்கில ஆட்சியை அறவே நீக்க ஒன்றுகூடினர். இந்திய நாடு முழுவதுமே கிளர்ந்தெழுந்து, ஆங்கிலேயரை எதிர்க்கும் அளவுக்கு வலுவான புரட்சி உருவாகத் தொடங்கிற்று. இந்நிலை அறிந்த ஆங்கில அரசாங்கம் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பறித்துத் தன் நேரிடைஆட்சியின் கீழ் கொண்டுவந்தது. 1858 ஆகஸ்டில், இந்தியஅரசியல் சட்டம் லண்டன் பார்லிமெண்டில் நிறைவேறியது. கம்பெனி கவர்னர் ஜெனரல்கள் போய், அரசப்பிரதிநிதிகள் வந்தனர்.

1858 நவம்பர்முதல்நாள், விக்டோரியா மகாராணி, ''இந்தியர்களின் வாழ்வு எங்கள் வலிமை. அவர்கள் மனநிறைவு எங்கள்ஊக்கம். அவர்கள் செலுத்தும் நன்றி எங்களுக்குப்பரிசு'' என இந்தியரின் நலனில் தனக்குள்ள அக்கறையையும், ஆர்வத்தையும் தனது பேரறிக்கை வாயிலாக வெளிப்படுத்தினள்.

அதன் பிறகு நாட்டிலே அமைதியும், ஒழுங்கும், நீதியும், நம்பிக்கையும், பாதுகாப்பும் ஏற்பட்டன. மூன்று நூற்ருண்டுகளாக, நாட்டைச் சூழ்ந்திருந்த அரசியல் புயல் ஓய்ந்து அமைதி ஏற்பட்டது. கல்வி கற்கவும், பல நூல்களைப் பயிலவும் மக்கள் வாய்ப்புப் பெற்றனர். ஒருபால், ஆங்கில அரசாட்சி நாடெங்கும் கல்விச் சாலைகளை நிறுவி, புதிய கல்வித் திட்டங்களைச் செயல்படுத்திற்று. மேலை நாட்டிலிருந்து இங்கு வந்த கிறிஸ்தவப் பாதிரிமார், இவ்வகையில் பெருந்தொண்டு புரிந்தனர். மறுபால், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்

[10-ம் பக்கம் பார்க்க]

**சு. சண்முகம் எம். ஏ.**

# பயத்தினுலும் சாவு, விஷத்தினுலும் சாவு

## காலச் சக்கரம்

கத்துப் பற்றைகளுக்குள்ளிருந்துவந்து ஏறிநின்று நாதகானத்தில் லயித்துப்போய் படம் விரித்து ஆடியதாக 'ஈழநாட்'டில்தான் எப்பொழுதோ வாசித்த ஞாபகம். குறிப்பிட்டதினத்தன்று காலை 'கதிரவன்' எழுதிய காலச்சக்கரக் குறிப்புடன் இந்தப்பழைய நினைவும் சேர்ந்து மனதில் குமைந்ததினுல், தீர்த்தமாடிவிட்டு நாதஸ்வர மேளதாளத்துடன்கோவிலுக்குத் திரும்பிய சுவாமியுடன் நடந்துபோக முதலில் சிறிதே தாமதமாக விருந்ததென்ருலும் தைரியத்தை வருவித்துக்கிளம்பிவிட்டேன். வழியில் அடியவர்களின் அர்ச்சனை, காணிக்கைகளுக்காக தீர்த்த யாத்திரைக்கோஷ்டி நின்றுநின்று போய்க்கொண்டிருந்தது. அத்துடன் அன்று நாதசுரம் வாசித்த இளைஞரோ அந்தப் பழைய நாள் யாத்திரைப் பாதைவித்துவானின்குடும்ப உறவினர், அவரது சொந்த உடன்பிறப்பு என்றும்கண்டு கொண்டபோது வழிநெடுக இந்தநாகபாசத்தைநினைத்து ஒரே கிலியும் திகிலும்தான். எந்தப் புற்றுக்குள், என்ன வகை ஐந்திருந்து எப்படி வெளிவந்துமறைந்துபதுங்கி நின்றுஉள்ளங்காலிலேவிஷத்தைக் கக்கி உச்சிவரை அதன் சுவாலையைப்பரவவிட்டு அதன்பின் மாயமாக மறைந்துவிடுமோ என்றெல்லாம் எண்ணியவாறு நாதஸ்வர கானத்துக்கு சற்றுஎட்டவே நின்று சுவாமி பின்னுல் நடந்து வந்தேன். போதாக்குறைக்கு அந்த இளைஞர் அன்று பார்த்து புன்னுகவராளி வேறு வாசித்து என்னைக் கடுமையாகச் சோதித்துவிட்டார். நல்ல காலமாக பொழுது இருள்படுவதற்கு முன்னதாகவே சுவாமி அன்றைக்கு கோவில் சேர்ந்துவிட்டார். காலிலே ஒரு நாகதாளி முள்கூடத்தைத்துதுன்புருதவண்ணம் முருகன் என்னையும் பாதுகாப்பாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார். திறந்த வெளியில் இசை இன்பம் பருகுவதில் மாந்தருக்குமட்டுமன்றி விஷஜந்துக்களுக்கும் கூடத்தான்அலாதிப்பிரியம். என்ன செய்யலாம், கடவுளின் படைப்பு.

### அஞ்சி அஞ்சிச் சாவார்!

'ஆத்ரேயன்' எழுதியதையும் படித்துப் பார்த்தீர்களா? அவர் எழுதுகிருர்:- வைத்தியர்கள் விஷப்பாம்பு கடித்து மரணமடைந்தவரின் சாவுப் பத்திரத்தில் 'சாவு பயத்தினுல் ஏற்பட்டது' என்றே குறிப்பிடுவர். இது முழு உண்மை. விஷத்தினுல்தான் ஏற்பட்டது என்று எழுதிவிடில் அதனை நிரூபிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும் என்று அஞ்சியும் வைத்தியர்கள் இப்படி எழுதக்கூடும்.

விஷமற்ற பாம்பு கடித்தும் அநேகர் சாகின்ருர்கள். ஆனுல் இவர்களின் பயத்தைத் தெளிவிப்பதற்கு ''தம்பி இதெல்லாம் மூடநம்பிக்கை'' என்று கூறிவிட்டால் போதாது. அது பயனளிக்காது. அது விஞ்ஞானரீதியில் நம்பிக்கை ஆதாரமுண்டா இல்லையா என்பதை அறிந்த பிறகுதான் மனிதனுல் பயமின்றி வாழமுடியும்.

நம் முன்னோர்கள் எல்லோரும் புத்தியற்றமூடர்களல்லர். அவர்கள் வாழ்ந்த காலத்தில் நவீன வசதிகள் குறைவு. அதனுல் சூழலைக் கண்டு அறியுந்திறன் அவர்களிடத்தே நன்கு பரிணமித்திருக்கவேண்டும். தாங்கள் கண்டவற்றிலிருந்து இயற்கை விதிகளை நிர்ணயிப்பதில் அவர்கள் தவறு செய்திருக்கலாம் - தற்கால அறிவின்படி. அதற்குக் காரணம் அவர்களது அறிவுக்குறையல்ல. தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் எல்லாவற்றையும் அவர்கள் அறிந்திருக்காததேயாகும்.

பயம் தெளிய அறிவுவேண்டும். அறிவு வளர ஆராய்ச்சி வேண்டும். கொம்பேறிமூக்கன் என்று ஒரு வகைப் பாம்பு உண்டு. அது கடித்தால் பயத்தினுல் சாகமுடியும். விஷத்தினுலல்ல. கோடாரிப்பாம்பிற்கோ அல்லது சாரைப்பாம்பிற்கோ முன்பல்லில் விஷப்பற்கள் கிடையா. அவை கடித்து மனிதர்இறக்கக்கூடும்-பயத்தினுல்.

### இணுவிலின் பெருமை

காரைக்காட்டில் சுகவீனமுற்றுப்போயிருக்கும் ஒரு நண்பரைச் சென்று பார்த்துவிட்டு இணுவில் கந்தசுவாமி கோவிலடியில் மக்கள் இரதத்துக்காக- பஸ்ஸுக்காக காத்து நின்றேன். வெகு நேரமாகிவிட்டது. இணுவில் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் தைப்பூசத்தன்று அச்சுடைந்து மேலே நகராமல் அங்ஙனே பொறுப்பாக நின்றுவிட்ட கோவில் மஞ்சமெப்படியிருக்கிறது என்று பார்த்துவர மனம் விழைந்தது. உள்ளூர் தச்சுத்தொழிலாளர் செப்பனிடும் வேலையைத் துரிதமாகச் செய்துகொண்டிருக்கின்றனர். அபூர்வ வேலைப்பாடுகளினுலும் அதன் உயரத்தினுலும் எடுப்பானதோற்றத்தினுலும் புகழ்பெற்ற இம்மஞ்சத்தை ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் இன்றைக்கும் அண்ணுந்துதான் பார்க்க வேண்டும். பார்த்துவிட்டுத் தலையைத்தாழ்த்துவதற்குள் பிடரிவலி எடுத்துவிடும். நெஞ்சிலும் கூடத்தான். பின்னே இருக்காதா? [illegible] பார்க்கும்போது ஏற்படும் ஓர் உணர்ச்சியன்றோ எழுகிறது. கீதாசாரியன் அர்ச்சுனனுக்கு கீதோபதேசம் செய்த போர்க்களத்து இரதம் இத்தனை அழகாயிருந்திருக்குமா? ஆனுல் இந்த சித்திர மஞ்சமும் என்னவெல்லாமோ கதை கதையாகச் சொல்லுகிறதே. சிற்பிகள் இதற்கு இறகுமட்டும் வைத்திருந்தால்அப்படியேஆகாயத்தில்எழுந்துஎப்பொழுதோ பறந்துபோயிருக்கும். அது நடைபெறவில்லை. கோவில் வீதியில் இப்படியாக இன்று அவலப்பட்டு அச்சிடன்டுக்குள்ளாகிப் போய்க்கிடக்கிறது. அது பிரேக்டவுன் ஆகி தரித்து நின்றுவிட்ட இடத்திலேயே சுற்றிலும் பனை உயரத்துக்கு தென்னோலைக்கூடுகட்டி மறைத்து, உடைந்த அச்சு செப்பனிடும் வேலைநடைபெறுகிறது. சிலதினங்களில் ஒப்பேறிவிடுமாம்.

கோவில் வீதியிலிருந்து திரும்பி நடந்துவந்து பெருந்தெருவில் கால்வைப்பதற்குள்ளாக இடைவழியில் ஒரு புதியகல்வீட்டைத்திரும்பிப் பார்த்ததில் கழுத்துக்குள் சுழுக்கிக்கொண்டது. 'சின்னராசா- தவில்' என்ற பளிங்கு எழுத்துக் கண்ணைப் பறிக்கிறது. கார் கரேஜ், பூந்தோட்டம், நிலாமுற்றம் உப்பரிகை ஆகிய எல்லா விமரிசைகளுடனும் அப்டுடேட் பங்களாவாகத்திகழும் இந்த நவமாளிகையில் ஒரு புறத்தே 'கிராமசேவகர்' என்ற போர்ட்டும் தொங்குகிறது. இந்நாள் மேளக்கார இளைஞருக்கிருக்கும் மனோதர்மத்தை எண்ணிவியந்தவனுய்பெருந்தெருவில் கால்வைக்கமுனைந்தவேளை, அந்த மத்தியான வெயிலில் குளிர்ந்த வேப்பங்காற்ருக எங்கிருந்தோ நல்ல நாதசுர கானம் தவழ்ந்து வந்தது. அப்படியே இரண்டு தட்டு பின்னுக்குப்போய் ஒரு சின்ன மாரியம்மன் கோவிலில் கூடிநின்ற கூட்டம் பற்றி விசாரித்தபோது 'நாள் மேளம்' வாசிக்கிருர்கள் என்ருர் ஒருவர். அந்தப்பக்கமாகத்தான் நாதஸ்வரமும் தவிலும் பக்குவ

[10-ம் பக்கம் பார்க்க]

''லேடன்'' LEYDEN
தயாரிப்புக்கள்
○ பெனியன்
○ ஸ்போட்ஸ் சேட்
○ ரி சேட்
○ ரெறி சேட்
○ ரெறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னருமைத் தங்கைக்கு

—வட்டூர் பங்கய மணாளன் —

அன்பிற்குரிய என் தங்காய்
அன்போடிங்கே வந்திடுவாய்
பண்பு நிறைந்த பலவுரைகள்
பகர்வேன் மனதிற் படியவைப்பாய்

உள்ளம் என்ற பெட்டகத்திற்
கள்ளம் இருத்தல் நலமல்ல
வெள்ளையுள்ளம் வேண்டுமம்மா
வேதனையெல்லாம் விலகுமம்மா

அன்பும் பண்பும் அறநெறியும்
அமைந்திடவேண்டும் நின் தனக்கு
வன்பு கொண்ட மனிதர்களின்
வலையில் வீழ்ந்திடல் பாவமறி

பெற்ற அன்னை பெருந்தெய்வம்
பெருமை கொள்ள வைத்திடுவாய்
நற்றவத்தின் பயனாக
நாமும் தமிழராய் வந்தோம்

அச்ச மடமும் நாண் பயிர்ப்பும்
அருந்தமிழ்ப் பெண்ணின் அணிகலனும்
நிச்சயமாக நீயிந்த
நித்தில அணிகளை அணிந்திடுவாய்

நாணம் நினக்கு வேண்டுமம்மா
நாணவேண்டிய இடமெல்லாம்
ஞாலம் தன்னின் நின்சேவை
சீலம் பெருக்கும் சிந்திப்பாய்

பெண்ணுன் பேச்சுப் பொன்பேச்சு
என்று மற்றோர் போற்றிடவே
கண்ணின் மணியே நீயென்றும்
கனிவாய்ப்பேசி மகிழ்ந்திடுவாய்

கெட்ட வழிகளில் நீ சென்றால்
கேடு வருவது திண்ணமதாம்
துட்டர் கூறும் வார்த்தைகளை
துளியும் மனதிற் கொள்ளாதே

அண்ணன் என்றால் இல்லென்பார்
அறியாப் பித்தர் அமைதியுறார்
எண்ணம் அற்ற புல்லியர்கள்
எதிராய்ப் பேசத் தலைப்படுவார்

உனது அன்பு தூய்மையெனில்
இன்னார் உரைக்குப் பயனேது
நினது வாழ்வு சிறப்படைய
நல்லோர் வார்த்தை கேட்டிடுவாய்

அன்பு அதனைக் கெடுத்திங்கே
இன்பமடைவோர் ஆயிரம்பேர்
பண்பு கெட்ட மாந்தர்களின்
பழக்கம் என்று மாறிடுமோ?

சத்திய நெறியின் நிலைநின்று
நித்திய வாழ்வை யடைந்திட்ட
உத்தமன் காந்தி வகுத்துள்ள
உண்மைகள் போற்றி வாழ்ந்திடுவாய்

கற்புக்கற்பு என்பதல்லால்
கடைப்பிடித்தல் அருமையம்மா
இப்புவிதன்னில் கற்புடையார்
இனிதாய் வாழல் காண்பாயே

கற்பே நமக்கு அணியென்று
கருத்திற் கொண்ட மகளிர் பலர்
நற்றேன் தமிழர் மரபினிலே
நனிவாய் வாழ்ந்து போயினரே

பொன்னால் இழைத்த நகையெல்லாம்
வேண்டாமம்மா நின் தனக்கு
பொன்னேயனைய கற்பென்னும்
நன்னகை போதும் நினக்கிங்கு

மேன்மைக் கலைகளைக் கற்றிடலாம்
மேவிடும் இலக்கணம் படித்திடலாம்
தொன்மைத் தமிழனின் பண்பினை நாம்
துறந்து நடத்திடல் துர்மதியாம்

ஆசை நீக்கும் ஆசிரியன்
அறிவை நமக்கு ஊட்டுகிறான்
காசை அள்ளி வீசிடினும்
கற்றாலன்றிக் கற்கோமோ

கற்குங் கல்வி நம் வாழ்விற்
குற்ற துணையாய் இருப்பதுடன்
குற்றஞ் செய்யும் வேளையிலே
கொடும் வேலாக நிற்றல் வேண்டும்

புன்னகையும் பெருமகிழ்வும்
உன் முகத்தில் நிலவுகவே
பன்னும் பண்பாம் பெருநிதியுன்
பக்கத்திருத்தல் நலமம்மா

வாயில் வாய்மை மணம்வீச
வழுவில் நீதியுனைச் சூழ
ஏயும் கண்ணிற் கருணைமழை
இலங்கிட வாழ வேண்டுமம்மா

சூட்டும் கோட்டும் சப்பாத்தும்
போட்டாற் பெரியோனென நினைத்து
மோட்டுக் குணமும் மணமதியும்
கொண்டோர் தம்மை மதியாதே

சிறியோர் சொல்லும் சிறு கூற்றைச்
சிந்தை தனிலே கொள்ளாதே
வறியோரெனினும் அவர்கள் தம்
வார்த்தையிலுண்மை யிருப்பினெடு

அன்பின் தங்காய் உன்னண்ணன்
அறிஞன் அல்லனாயிடினும்
பண்பின் மிக்க நல்லறிஞர்
பகர்ந்த சொற்கள் பகர்ந்து நின்றேன்

தங்காய் நிந்தன் தளிருள்ளம்
தனிலே யிவற்றைப் பதித்திடுவாய்
மங்காப் புகழும் மாண்புகழும்
மகிழ்வுடன் பெற்றே வாழ்ந்திடுவாய்

அருமைத் தங்காய் இவ்வண்ணன்
அறிவிற் சிறியோனாயிடினும்
உரிமையுடனே சில உறுதி
உனக்குப் பயந்தேன் ஏற்றிடுவாய்

## திருமணம்

சோவியத் யூனியனில் ஆடவர்கள் 25-29 வயதுக்கும், அரிவையர் 20-24 வயதுக்குமிடையிலேயே பெரும்பாலும் திருமணம் செய்துகொள்கிறார்கள். கம்சட்கா குடாநாட்டிலேதான் கூடுதலாகப் புதுமணத்தம்பதிகள் கடிமணம் செய்துகொள்கிறார்கள்.

'சோவியத் யூனியனில் ஆண்டுதோறும் 40-45 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. தை, மாசி, பங்குனி மாதங்களிலேயே கூடுதலான குழந்தைச் செல்வங்கள் பிறக்கின்றன.

# குடும்பம்



## பெண்

### சிந்தனைக்கு அப்பாற்பட்டவரோ!

பெண்ணிற்கு ஒரு கடமையைச் சொல்லுமுன் அவள் செய்த மூன்று நற்செயல்களைப் பாராட்டிப் பிறகு கடமையைப்பற்றிச் சொல்.

-ப்பாரிப்பெயின்

ஃ

அழகு பெண்களுக்குப் பெருமையைத் தருகிறது. அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மதிப்பைத்தருகிறது. கற்பு அவர்களைத் தெய்வமாக்குகிறது.

மணவாளன் ராஜனுமாய், சேர்ந்த மனைவியொரு மந்திரியாய், இணைந்திருவர் நாட்கழிக்க அது எவ்வளவோ பாக்கியமாம்.

--உபதாஸ்

ஃ

ஆண்கள் வெண்ணெய் போல, பெண்கள் நெருப்பைப்போல. நெருப்பை அணுகியதும் வெண்ணெய் உருகாதிருக்கமுடியுமா? ஆதலால் பெண்கள் கணவன்மாரைத்தவிர எந்த ஆண்களோடும் நெருங்கிப் பழகக் கூடாது.

-டாக்டர். மு.வ.

ஃ

ஒழுக்கத்தில் உயரவிரும்புகிற பெண் எந்த அளவுக்கு ஆடவர் சகவாசத்தைத் தள்ளிவைக்கவேண்டு மென்றால் கடவுளே காட்சிதர ஆண் வடிவில் வந்தாலும் ஈஸ்வரா உன் ஆண்வடிவை மாற்றி பெண்ணுருவுடன் என்னிடம் அணுகு என்று சொல்வதற்கொப்ப இருக்கவேண்டும்.

-சாரதாதேவி

ஃ

ஓர் ஆணின் கைப்பட்டு கசங்கிய மலராக ஒரு பெண் வாழ்வதைவிட, அவள் ஒரு முகரப்படாதமலராய்காலத்தைக் கழிப்பதே மேல் என்று நான் சொல்லுவேன்.

-சாரதாதேவி

ஃ

பெண்களுக்கு ஆண்களின் புகழைவிடச் சிறந்த செல்வம் எதுவுமில்லை.

-தாகூர்

ஃ

பெண்களை அடக்கி ஆழ்வது கூடாது, ஏனெனில் மனைக்குவிளக்கு அவர்களே. ஆகவே துருவ நட்சத்திரத்தைப்போன்று தாமாகவே அவர்களைச் சோபிக்கச்செய்யவேண்டும். காற்றுப்பட்டோ எண்ணெயின்றியோ அணையாத ஒளிவீசும் நந்தா விளக்குகள் மாதர்களே.

-தாகூர்

ஃ

பெண்மையில் தெய்வத் தன்மை இசைந்துநிற்கிறது. கொந்தளிக்கும் வாழ்க்கைப் புயலுக்கிடையே [illegible] சூரிய

சஞ்சீவி பெண்மைக் கோலத்தில் இருக்கிறது. பெண்மையில்லாவிட்டால் உலகத்திலுள்ள வேகத்திற்குச் சமாதானமில்லை. வீரத்திற்கு வெற்றியின்பமில்லை.

-கி. வா. ஜகந்நாதன்.

# இதுதான் பெண்மை

கவி. கா. முகமது சரீப். பி. ஏ.

செவிலித்தாய் மகளை நினைத்து வருந்துகின்றாள். வெயிலின் கொடுமையையும், பாலையின் நிலைமையையும், தலைவியின் மென்மையையும், தலைவனின் ஆண்மையையும் நினைத்துப் புலம்புகின்றாள்.

தலைவி மாந்தளிர் போன்ற நிறமும் மென்மையும் உடையவள். திரட்சி அமைந்த குறிய வளையலை அணிந்தவள். அவள் தலைவனின் துணையை மேற்கொண்டு பாலை நிலத்தே பயணத்தை மேற்கொள்வாளானாள்.

அவள் செல்வச் சிறப்போடு பிறந்து வளர்ந்தவள். கதிரோன் புகாக் காவலமைந்த இல்லில் இருந்தவள். மண்மகளைப் பார்த்தறியாதவள். அவள் கைகளில் செம்பொன்னாலாகிய கலமிருக்கும். அதில் சித்திரவேலைப் பாடுகள் நிறைந்திருக்கும்.

யாங்கு வல்லுநள் கொல்'' என்று புண்பட்டுப் புரையோடிய உள்ளமுடைய செவிலித்தாய் எண்ணி ஏங்குமாறு போய்விடுகின்றாள்.

பாலை நிலமோ நிழல் அடங்கி அற்றுப்போனது, நீரில்லாதது, கடத்தற்கரியது. தலைவனோ வீரக் கழலை அணிந்தவன், விரைந்து செல்லும் ஆற்றலுடையவன். அவனுக்குப் பாலையைக் கடக்கும் பழக்கமுண்டு, வன்மையுமுண்டு. அவளோ பாலையிற் சென்றறியாதவள், விரைவாக நடந்துமறியாதவள். அவள் எதையும் பொருட்படுத்தாது தலைவனோடு விரைந்து நடந்து செல்கின்றாள். பாலையிலொரு நீரற்ற வறண்ட சுனை. அந்தச் சுனை உலர்ந்து மிக்க வெப்பத்தையுடையதாயிருக்கிறது. அதில் முலாம் பூசியதைப்போல், தரையைச்சேர்ந்து கலங்கல் நீர் காணப்படுகிறது. அதைத் 'தவ்'வென்னும் ஓசைபட உறிஞ்சிக் குடிக்கிறாள் அவள். இந்தக் காட்சியைத் தன் மனக்கண்முன் காண்கின்றாள் செவிலித்தாய். அவ்வாறு குடிக்குமாற்றலை அவள் எங்ஙனம் பெற்றாளெனப் புலம்புகின்

**[பெண்மை என்றால் என்ன என்பதைச் சித்தரிக்கும் இக்காட்சி சங்க இலக்கியத்தின் ஒரு பாடலாகும். தாலாட்டிச் சீராட்டி அன்புடன் அணைத்து வளர்த்த பெற்றோரை விட்டு இடையிலே சந்தித்த தலைவனுடன் தலைவி சென்றுவிடுகிறாள். தலைவியின் இளமையையும் மென்மையையும் எண்ணிச் செவிலித்தாய் மகளைத் தேடிப் பின் தொடர்கிறாள். நாமும் தொடர்வோம்.]**

அத்தகைய கலத்தில் பால் நிரப்பப்பட்டிருக்கும். அழகிய பொரி அந்தப் பாலில் கலக்கப்படிருக்கும். அவள் அதைக்கூட அதிகமென்று கூறி உண்ணமாட்டாள். அத்தகையவள்,

''நிழலான் றவிந்த
நீரில் லாரிடைக்
கழலோன் காப்பக்
கடுபுகுபோகி
அறுசுனை மருங்கின்
மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி
தவ்வெனக் குடிக்கிய

றாள். 'தானே ஏந்திய செம்பொற் புனைகலத்தம் பொரிக்கலந்த, பாலும் பலவென' எண்ணுதவள் என, எண்ணி ஏங்குகின்றாள்.

செல்வமனையை விடுத்துப் பாலைநிலத்தே செல்கிறாள். மனையில் மிகுதியான பால். பாலையில் ஒட்டிய நீர், பாலோ பொரிகலந்தது. நீரோ கலங்கியது. பாலின் கொள்கலம் பொன்னாலாகியது. நீரின் கொள்கலம்

(10-ம் பக்கம் பார்க்க]

# பேச்சுவழக்கு அகராதி

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

'வேணும்' என்றும் பாடியிருப்பதாகவும் அவர்கள் எல்லாரும் பெரும் புலவர்கள், அவர்கட்கு அப்படி எழுத உரிமை உண்டென்றும், அவர்கள் அப்படி எழுதியது சரியெனவும், ஏற்கனவே தான் சொல்லியவைகட்கு நேர்மாறாக வாதாடத் தொடங்கினார்.

நான் இடைமறித்துக் கேட்டேன்:

''சுப்ரதீபனும் பெரும் புலவனா?

''ஆம்.

'காலாயுதக் கொடியோன்
கை ஆயுத வழியே
மாலாயுதமீன்ற
மாமணியைத் தானு
குத்தாள்''

என்று இத்தனை அர்த்த புஷ்டியோடு பாட வேறு யாரால் முடியும். அவன் மஹாகவி'' என்றார்.

மஹாகவிக்கு அவர் கூறும் இலக்கணத்தைக் கேட்டு நான் சிரித்தேன்.

அவர் பேசி முடிந்ததும் கலாநிதி சாந்தமாகச் சொன்னார்.

''இப்போதுதான் நீங்கள் என்னிடத்திற்கு வந்திருக்கிறீர்கள். பெரும்புலவன் சிறுபுலவன் என்பது இருக்கட்டும், நீங்கள் பெரும்புலவர் எனக் கருதும் பாரதியும் சுப்ரதீபனும், அருணகிரியும் ஆச்சே, போச்சுது, அஞ்சாறு, தரிச்சிராது, வேணும் என்பன போன்ற வழக்குச் சொற்களைப் பிரயோகித்திருக்கிறார்கள். அவர்கள் பிரயோகித்திருப்பதனாலேயே இலக்கியங் கற்போர் அவைகளையும் செந்தமிழ்ச் சொற்கள் என எண்ணி மயங்கக்கூடும். தாங்களும் அப்படியே எழுதவும் முன்வரலாம். அதனால்தான் வழக்குச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான செந்தமிழ்ச் சொற்களை எழுதுவது அவசியமாகிறது.''

ஆசிரியர் வ. நீ. பதில் பேசவில்லை.


கலாநிதி என்பக்கம் திரும்பி ''நீர் என்ன சொல்கிறீர்'' எனக் கேட்டார்?

''நான் என்னத்தைச் சொல்வது? நீங்கள் சரியான விளக்கங் கொடுத்துவிட்டீர்களே'' என்றேன் நான்.

அதன் பின்னர் ஆசிரியர் எழுந்து தம் வீட்டுக்குப் போனார். மற்றவர்கள் சாப்பிடச் சென்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு சென்று திரும்பிய நம்நாட்டு கலைஞருடன் ஒரு பேட்டி



[ஈழத்து தவில் வித்துவான் திரு. கே. கணேச பிள்ளை மலேயாநாடு சென்று திரும்பியுள்ளார். அவர் நமது நிருபர் எஸ். ஆர். ஞானசுந்தரத்துக்கு அளித்த பேட்டி.]

கேள்வி:- தாங்கள் எந்த இடங்களுக்குச் சென்றீர்கள்?

பதில்:- நான் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்றேன்.

கே:- எந்த இடங்களில் தமிழ் மக்கள் தங்களுக்கு அதிக ஆதரவு தந்தார்கள்?

ப:- கோலாலம்பூரில் உள்ள தமிழ் மக்கள் எனக்கு அதிக ஆதரவைக் கொடுத்தார்கள். அவர்கள் சங்கீதக் கலையில் மிகவும் ஆர்வமுள்ளவர்கள். மலாயாவிலுள்ள யாழ்ப்பாணத்தவர்கள் இங்குதான் அதிகம். அவர்கள் சமயம், தமிழ்ப்பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றை வளர்ப்பதில் அதிக சிரத்தை எடுக்கிறார்கள்.

கே:- எந்த எந்த இடங்களில் தங்கள் கச்சேரி இடம்பெற்றது?

ப:- கோலாலம்பூரைத் தவிர சிறம்பான், ஈப்போ, மலாக்கா, கிள்ளான், அலோஸ்டர், குவாந்தன், மூவார் முதலிய பட்டினங்களிலும் கச்சேரிகள் நடைபெற்றன.

கே:- சிங்கப்பூரில் கச்சேரி இடம்பெறவில்லையா?

ப:- சிங்கப்பூரிலும் கச்சேரிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

கே: எந்தெந்த வானொலி நிலையத்தில் தங்கள் கச்சேரி ஒலிபரப்பப்பட்டது?

ப:- மலேசியா வானொலி சிங்கப்பூர் வானொலி, ரெடிவியூஷன் முதலியவை எமது வாத்திய இசையை ஒலிபரப்பின.

கே:- டெலிவிஷனிலும் தங்கள் கச்சேரி இடம் பெற்றதா?

ப:- மலேசியா டெலிவிஷனிலும் சிங்கப்பூர் டெலிவிஷனிலும் எமது கச்சேரிகள் ஒலிபரப்பப்பட்டன.

கே:- இக்கச்சேரிகளுக்கு தங்களுக்கு நாதசுரம் வாசித்தவர் யார்?

ப:- என்னுடன் கூடவந்த யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நாதசுர வித்துவான்களில் ஒருவராகிய ஆறுமுகம்பிள்ளை அவர்கள்.

கே:- தாங்கள் நாதசுரக் கச்சேரிக்கு மட்டுமா தவில் வாசித்தீர்கள்?

ப:- இக் கச்சேரிகளில் நாதஸ்வரம் மட்டுமல்ல, மற்றும் இதர வாத்தியக் கருவிகள் ஆகியபிடில், முகவீணை முதலியவை இடம் பெற்றன. சிலவற்றில் உள்ளூர் தவில்களுடன் சமாநிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கே:- தாங்கள் அவ்விடத்தில் எந்தெந்த ஆலயங்கட்குச் சென்றீர்கள்?

ப:- மலாயாவிலுள்ள பல கோவில்களுக்கும் சென்றேன். கோலாலம்பூரில் உள்ள கந்தசுவாமி கோவில், மகாமாரியம்மன் கோவில், விநாயகர் கோவில், ஆதீஸ்வரன் கோவில், பத்துமலை, சிங்கப்பூரிலும் மற்றைய இதர பட்டினங்களிலும் உள்ள ஸ்தலங்களுக்கும் சென்றிருக்கிறேன்.

கே:- தாங்கள் தங்கியிருந்த காலங்களில் கலை வளர்ச்சிக்கு எந்த இடத்தில் என்ன பணி செய்தீர்கள்?

ப:- கோலாலம்பூரில் தவில்காரர்களுக்கென ஒரு மறுமலர்ச்சி வகுப்பு சுமார் நான்குமாதகாலம் நடத்தியுள்ளேன்.

கே:- பாடசாலைகளுக்குச்சென்றீர்களா?

ப:- பாடசாலைகளுக்கும் சென்றிருக்கிறேன். மலாயாவில் 650க்குமேற்பட்ட தமிழ் பாடசாலைகள் இருக்கின்றன. அங்குள்ள அரசாங்கம்பள்ளிகளில் தமிழ்ச் சங்கீதத்தைவளர்க்க அதிக ஆதரவைக் கொடுக்கிறது வித்துவான் ஆறுமுகம் பிள்ளை அவர்களும் யானும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களின் சங்கீத மறுமலர்ச்சிக்கு வகுப்பு நடத்த உதவி செய்துள்ளோம்.

கே:- தாங்கள் கலந்துகொண்ட பெரிய வைபவம் எது?

ப:- இறுதியாக பத்துமலையில் தைப்பூச உற்சவத்தன்று மலாயாவின் பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களுக்கு எம்மையும் [illegible] ஆறுமுகம்பிள்ளை அவர்களையும் மகாமாரியம்மன்




## தயாராகும் புதிய படங்கள்

'ராஜாத்தி' என்ற படத்தைத் தயாரிக்க 'ஒரு விரல்' படத்தை தயாரித்த அசோஸியேட் நிறுவனத்தினர் திட்டமிட்டுள்ளனர். இப்படத்தில் மலையாள மங்கையாக மனோரமாவும், அவருடன் சேர்ந்து ஹோட்டல் நடத்தும் ஆசாமியாக வி. கே. ராமசாமியும் நடிக்கின்றனர். முத்துராமன், உதய சந்திரிகா ஜோடியாக நடிக்கின்றனர். மா. லட்சுமணன் டைரக்ட் செய்கிறார்.

மலைக்கள்ளன், மரகதம் படங்களை எடுத்துள்ள கோயம்புத்தூரின் பட்சிராஜா ஸ்டுடியோ நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் தமிழ்நாட்டு படவுலகில் காலடி எடுத்து வைக்கிறது. அது அடுத்து எடுக்கவிருக்கும் படம் ஒன்று துரித தயாரிப்பாகும். இப்படம் ஈஸ்ட்மன் கலரில் எடுக்கப்படும். சென்ற வாரம் நடிகர் தெரிவு நடைபெற்றது.

சிரிப்பு நடிகர் கே. ஏ. தங்கவேலு ஒரு முழு நீள நகைச்சுவைப் படத்தைத் தயாரிக்கத்திட்டமிட்டுள்ளார். இதில் அவருடன் சந்திரபாபு நடிக்கிறார். மா. லட்சுமணன் டைரக்ட் செய்வார்.

'சாந்தி' என்ற தமிழ்ப் படத்தை ஹிந்தியில் தயாரிக்கப் போவதாக நடிகர் திலகம் சிவாஜி என்னிடம் கூறினார். இப்படத்தில் சுனில்தத்தை கதாநாயகனாகப் போட யோசித்திருப்பதாகவும் கூறினார். மற்றும் வஹிதா ரஹ்மான் தர்மேந்தர், மும்தாஜ் ஆகியோரும் நடிப்பார்கள். டைரக்ஷன் பொறுப்பை பீம்சிங்கிடம் ஒப்படைத்திருப்பதாகவும் சிவாஜி கூறினார்.

—'யோகி'

## 'பூஜை இல்லா கலியாணம்'

இம்மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தாரின் 18-வது ஆண்டு நிறைவு விழாவில் நல்லூர் கலைக் குவியல் நாடகமன்றத்தாரின் ''பூசை இல்லாக் கலியாணம்'' என்ற நாடகம் மேடையேற்றப்படவிருக்கின்றது. இந்நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை திரு. என். கேகையலிங்கம் பொறுப்பேற்றுள்ளார்.

---

கோவில் தலைவர் திரு. வீரையா அறிமுகம்செய்து வைத்தார். இவ்விழா [illegible] திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

## 'இந்திய-சோவியத் கூட்டுத் தயாரிப்பு எனது நெடுங்கால கனவு'

### படவுலகமேதை சத்தியஜித்ரே கூறுகிறார்

இந்தியப் பட உலக மேதைகளில் ஒருவரான சத்தியஜித்ரே, திரையுலகில் இந்திய-சோவியத் கூட்டுறவைப் பெரிதும் விரும்புகிறார்.

இது குறித்து அவரிடம் உரையாடிய பொழுது, ''இந்திய-சோவியத் கூட்டுத் தயாரிப்பு எனது நெடுங்காலக் கனவு'' என்று கூறினார்.

''இதுவரை 'பர்தேசி' என்ற ஒரு படம்தான் இந்திய-சோவியத் கூட்டுறவில் உருவாகியுள்ளது. அபனுசி நிகிதினின் நாட்குறிப்பையொட்டி அது தயாரிக்கப்பட்டது. நவீனவங்கநாடகத் துறைக்கு வித்திட்ட கெராஸிம் லெபதேவ் என்ற ரஷ்யக் கலைஞரின் வாழ்க்கையைப்படமாக்க ஆசை. நேரமும், வாய்ப்பும் இருக்குமானல், அதை இந்திய-சோவியத் கூட்டுறவு முறையில் தயாரிப்பேன் என்றார், சத்தியஜித்ரே.

கல்கத்தாவிலுள்ள அவரது இல்லத்தில் நான் சத்தியஜித்ரேயைச் சந்தித்தேன். திரைப்படத் தயாரிப்பு பற்றியும், சோவியத் திரைக்கலைபற்றியும் அவரது கருத்துக்களைக் கேட்பது ஓர் அரிய அநுபவமாகும்.

சத்தியஜித்ரே சொற்களை அளந்து, தனக்கே உரிய தனிப் பாணியில் பேசினார். அவரது பேச்சில் ஆக்க பூர்வமான சிந்தனைகள் மிளிர்ந்தன. அவரது நெடிது உயர்ந்த கம்பீர உருவம், திரைப்படக் கலையைப் பற்றிப்பேசுகையில் கனிந்து குழைந்தது.

இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் அவர் பார்த்த சோவியத் படங்களைப் பற்றிக்கேட்டேன்.

புதிய சோவியத் படங்களை அதிகம்பார்க்கவில்லையென்றும், ஈசன்ஸ்டீன், புதோவ்கின் போன்ற மேதைகளைப் படைத்த சோவியத்நாடு, உலகத் திரைப்பட வரலாற்றில் உயரிய இடம் பெற்றுவிட்டதென்றும் அவர் சொன்னார்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன், சோவியத் டைரக்டர் புதோவ்கினும், நடிகர் செர்க்கசோவும் கல்கத்தாவுக்கு வந்திருந்தார்கள் என்றும், அப்பொழுது அவர்களைச் சந்தித்ததாகவும் அவர் கூறினார். அன்று சத்தியஜித்ரே டைரக்டராகவில்லை. திரைப்படச் சோதனை இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார்; வருங்கால வெற்றிக்கு அடித்தளம் அமைத்துக் கொண்டிருந்தார். பின்னர், பிரஸ்ஸல்ஸ் உலகப் பொருட்காட்சியில் அவர் செர்க்கசோவை மீண்டும் சந்தித்தார். அண்மைக் காலத்தில் பிரபல சோவியத் டைரக்டர்களையும், நடிகர்களையும் சந்தித்து உரையாடியிருப்பதாகவும், அவ்வுரையாடல்கள் மிக அருமையானவையென்றும் அவர் சொன்னார். வி. சுக்ராய், எம். கலாத்தஸோவ், எஸ். கெராஸிமோவ் போன்ற சோவியத் டைரக்டர்களுடன் தாம் மிகுந்த நட்புக் கொண்டிருப்பதாகவும், அவர்களது சீரிய நட்பைப் போற்றுவதாகவும் அவர் கூறினார்.

### மறக்க முடியாத அநுபவம்

தாம் ஒரேயொருமுறை சோவியத் யூனியனுக்குப் போயிருப்பதாக அவர் சொன்னார். 1963-ல் மாஸ்கோவில் நடைபெற்ற மூன்றும் சர்வதேசத் திரைப்படவிழாவில் அவர் கலந்துகொண்டார்.

அது ஒரு மறக்கமுடியாத அநுபவமென்றும், அதைப் போன்ற மாபெரும் திரைப்பட விழாவைத் தான் கண்டதில்லையென்றும், அங்கு ஏற்பாடுகளெல்லாம் மிகச்சிறப்பாக இருந்தனவென்றும், உலகப் படங்களுக்குப் பரந்த முறையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருந்ததென்றும், சர்வதேச நடுவர்களில் ஒருவராகத் தாம்பணியாற்றியதாகவும், 'நாற்பத்து ஒன்று', 'போர்வீரனின் கீதம்', 'அவன் விதி', 'நாரைகள் பறக்கின்றன' ஆகிய சோவியத்படங்கள் தம்மைக் கவர்ந்தனவென்றும், அவ்வமயம் உருவாகி வந்த 'போரும் அமைதியும்' என்ற படத்தைத் தாம் கண்டதாகவும் சத்தியஜித்ரே கூறினார். சென்ற ஆண்டில் மெக்ஸிகோ விழாவில் அப்படத்தின் இரு பாகங்களைப் பார்த்ததாகவும் அதை செர்கி போந்தார்சுக் மிகச் சிறப்பாக டைரக்ட் செய்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

மாஸ்கோ படவிழாவின் போது அவர் 'மாஸ்பிலிம் ஸ்டுடியோ'வுக்கு விஜயம் செய்தார். ''சோவியத் படத்தயாரிப்பாளர்களுக்கு என்ன அற்புதமான வாய்ப்புக்கள் உள்ளன என்று வியந்தார், அவர். ''மிக நவீன இயந்திரங்களோடு அங்கே படங்களைத் தயாரிக்கிறார்கள்!'' என்று கூறினார்.

''கோஸிந்த்சேவ் டைரக்ட் செய்த 'ஹாம்லெத்' என்ற சோவியத் படத்தை நான் கல்கத்தாவில் பார்த்தேன். அது லாரன்ஸ் ஒலிவியரின் 'ஹாம்லெத்'தை விடச் சிறப்பாக இருக்கிறது'' மற்றொரு சோவியத்படமான 'ஒத்தெல்லோ'வும் நன்றாக இருக்கிறது'' என்றார், சத்தியஜித்ரே.

[ஏ. பி. என். நிருபர்]

## வாஹினியில் நான்!

நமது கலைஞர் எஸ். அருமைநாயகம் எழுதும் 'வாஹினியில் நான்' என்ற தொடர்கட்டுரை இவ்வாரம் வெளியாகவில்லை, அடுத்த வாரத்திலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி பிறந்தார்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாள், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணுமலை, மயிலம், காஞ்சிபுரத்தைச் சார்ந்த சைவமடங்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்ததுமட்டுமன்றி, மாணவர்களுக்குக் கல்வி புகட்டியும் வந்தன.

குறுநில மன்னர்களும், பாளையக் காரர்களும், சமீன்தார்களும், பெருநிலக் கிழார்களும், செல்வர்களும், தமிழ்ப்புலவர்களைப் போற்றத் தொடங்கியதோடு, அதனைத் தமது தகுதிக்குப் பெருமையாகவும் கருதத்தலைப்பட்டனர். சிறந்த நூல்நிலையங்களையும் தங்கள் மாளிகைகளில் அமைத்தனர்.

இவ்வாறே, எட்டயபுரம் புதுக்கோட்டை மன்னர் போன்ருேரும், கட்டபொம்மனைப் பறிகொடுத்துக் கலங்கி இருந்த மக்களின் மனக்கொதிப்பை அடக்க, காலப்போக்கில் சில குளிர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கோயில்கள் அமைத்தல், மடங்கள், கல்விச்சாலைகள் நிறுவுதல் போன்ற நல்ல செயல்களில் ஈடுபட்டனர். கவிஞர்களுக்கும், புலவர்களுக்கும் இவர்களது அவைக்களத்தில் நல்ல செல்வாக்கு அமைந்தது.

விக்டோரியா மகாராணியின் உறுதிமொழியையொட்டி ஆட்சியாளர் மேற்கொண்ட ஆக்கப் போக்குகளாலும் சமஸ்தானங்களும், தனிப்பட்ட செல்வர்களும் மேற்கொண்ட நல்ல பல பணிகளாலும், இந்திய நாட்டில் பொதுவான அமைதி நிலவியது என்ருலும் மக்களின் விடுதலை வேட்கையை இச்செயல்கள்முழுதும் தணித்து விடுவதாக இல்லை.

## எட்டயபுர வாழ்க்கை நிலை

19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில், பாரதிபிறந்த நேரத்தில், அமைந்திருந்த சூழல் இது. அந்நாட்களில் எட்டயபுரத்து வட்டாரமக்கள் வாழ்க்கை நிலை என்ன என்பதையும் அறிவது நல்லது.

39 நகரங்களும், 1458 கிராமங்களும் கொண்ட திருநெல்வேலி மாவட்டத்தில் கி. பி. 1882 ஐ ஒட்டி ஏழத்தாழ 86 விழுக்காடு இந்துக்களும், 8 விழுக்காடு கிறிஸ்தவர்களும், 5 விழுக்காடு முஸ்லிம்களும் வாழ்ந்தனர். பெரும்பான்மை, கள் இறக்கலும், வெல்லம் காய்ச்சலும், பருத்தி பயிரிடுதலும், சிறுபான்மை, உழவுத் தொழிலும், அப்பகுதித் தொழில்களாக அமைந்தன.

நிலங்களில் மக்களுக்கிருந்த உரிமையை ஆராயின், 60 விழுக்காடு மக்கள் 'ரயத்துவாரி முறை'ப்படி ஆங்கில ஆட்சிக்கு நேரடியாக வரி செலுத்தினர். 29 விழுக்காடு நிலம் சமீன்தார்களுக்குச் சொந்தமாயிருந்தது. 8 விழுக்காடு இனும் தாரி நிலங்கள். 1440 சதுரமைல்களுள்ள சமீன்தாரிநிலத்தை 19 சமீன்தார்கள் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டு அனுபவித்துவந்தனர். அவற்றுள் ஒன்றே தெலுங்கு நாட்டிலிருந்து தமிழகம் வந்த எட்டப்பநாயக்கர் பெயரால் கி. பி. 1567 இல் நிறுவப்பட்ட எட்டயபுரம் சமஸ்தானம்.

## எட்டயபுர சமஸ்தானம்

ஓட்டப்பிடாரம் வட்டத்தில் அமைந்த எட்டயபுரம் சமீன், சமீன்களுள்ளே செல்வாக்குப்பெற்றது. 1,26,660 மக்கள் தொகை கொண்ட 349 கிராமங்களிலிருந்து எட்டயபுரம் சமீன்தாருக்கு ஆண்டு ஒன்றுக்குக் கிடைத்த வருமானம் 28,781 பவுன்கள். ஆண்டு ஒன்றுக்கு அவர் ஆங்கில ஆட்சிக்குச் செலுத்திய வரி 8,836 பவுன்கள். சுருங்கச் சொன்னல் அந்தப் பகுதிக்கு இவர் ஓர் அரசர் (ஆதாரம்] Khaml: Zvelebil P.H.D). இவரது அவைக்களத்திலே கூத்தும், பாட்டும், கேளிக்கைகளும் ஆராய்ச்சிகளும் நாள் தோறும் நடந்தவண்ணமிருந்தன. இக்கலைக் குழுவிலே பாரதியாரின் தந்தை சின்னச்சாமி ஐயருக்கு ஒரு தனி இடம் உண்டு.

சிவலப்பேரிஎன்ற குக்கிராமத்தில் வாழ்ந்த 'கடுவாய்' சுப்பையாவுக்கும், பாகீரதி அம்மாளுக்கும் பிறந்தார் சின்னச்சாமி ஐயர். இவரது தமக்கை குப்பம்மாள், சின்னச்சாமிஐயர் குருகுலமுறையில் தமிழிலும், வடமொழியிலும் பயிற்சிபெற்று விளங்கியதோடு, மருத்துவம், தர்க்கம், சோதிடம் முதலியவற்றிலும் போதுமான திறம் பெற்றிருந்தார். கிறித்தவப்பாதிரிமார் நடத்திய பாடசாலையில் சேர்ந்து இவர் ஆங்கிலமும் பயின்று இருத்தல் கூடும். முன்பு மொகலாயரின் ஆட்சிமொழியாயிருந்த பர்சிய மொழியின் இடத்தை இப்போது ஆங்கிலமொழி பிடித்துக் கொண்டதால் ''ஆங்கிலம் கற்றவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெறத்தகுதி பெற்றவர்கள்'' எனப் பாராட்டப்பட்டனர். ''கதிரவன்மறையாத ஆங்கிலப்பேரரசின்குடிமகன்'' என்று கூறிக்கொள்வதிலே ஆங்கிலம் கற்ற தமிழர்களுக்கு ஒரு பெருமிதமும் இருந்தது. நம் சின்னச்சாமி ஐயரும் இதற்கு விதிவிலக்கன்று. சமீனில் இடம் பெறும் வாய்ப்புக் கிட்டியதால், சிவலப்பேரியைவிட்டு நீங்கி எட்டயபுரத்திற்குக் குடியேறினர் அவர்.

## பாரதி பிறந்தார் எங்கள்பாரதிபிறந்தார்

அழுத்தமான சைவப்பிராமணராய் இருந்தும், ஆங்கிலக் கல்வியின் பயனுப் புதுமைநோக்கும், ஆராய்ச்சிப்போக்கும்இவர்கொண்டிருந்தார். அரசவைத்தமிழ்ப் புலவராகவும், அரசருக்கு ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியராகவும்சமீனில் இடம்பெற்றிருந்தும் இயந்திரங்களைக் கொண்டு விளைவுப்பொருள்களைப் பெருக்க வேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டு தனது வருவாயின் பெரும்பகுதியை இயந்திர ஆராய்ச்சியிலே இவர் செலவழிப்பாராயினர். எட்டயபுரப்பகுதியில் போதுமான பருத்தி விளைவும் இருந்ததால் திருநெல்வேலி நகரத்தில் தொழிற்சாலை அமைத்து. தொழிலை விரிவாக்கி, அதிகவருவாய்பெற வேண்டும் எனக்கனவுகண்ட சின்னச்சாமி ஐயர் அதற்கு முன்னேடியாக 1880-ல் எட்டயபுரத்திலொரு பஞ்சாலையும்நிறுவினர். பெயர்பெற்ற ஹார்வி சகோதரர்களின் ஆலைகள்கூட இதற்குப் பின்னரே தோன்றின என்பது இங்கு நினைக்கத்தக்கது. மேல் நாட்டு இயந்திரங்களை அக்காலத்திலேயே எவர் உதவியுமில்லாது தாமே பிரித்து மீண்டும் பூட்டக்கூடிய சக்தியும், திறனும் சின்னச்சாமி ஐயருக்கு இருந்தது. தனது தாய்மாமன் எட்டயபுரம் கிராம முன்சீபு திரு. இராமசாமி ஐயரின் மகளான இலக்குமி அம்மையாரை இவர் மணந்தார். சின்னச்சாமி ஐயரின் மூத்த பிள்ளையாக மட்டுமன்றி தமிழகத்தின் மாகவியாக,

செந்தமிழ்த்தேனி சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக்குயில்;
இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகைவனைக்
கவிழ்க்கும் கவிமுரசு,

நீடுதுயில் நீக்கப் பாடி
வந்த நிலா''
[பாரதிதாசன்]

எனப் பலரும் பாராட்டும் பண்பாளனுக 11-12-1882 (சித்திரபானு ஆண்டு, கார்த்திகைத் திங்கள், 27-ம் நாள்) நம் கவிஞர் பாரதி பிறந்தார்.

''சேற்றில் செந்தாமரை
முளைக்கும்
நத்தை வயிற்றில் முத்து
சிரிக்கும்''

அதுபோலவேகட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்த எட்டப்பன் வாழ்ந்த அதே ஊரிலே, தமது கவிதைகளால்சுதந்திரக்கனலை எழுப்பி [illegible] பிறந்தார் பாரதி.

# இந்த வாரத்தில் உங்கள் பலன்

பண்டித வித்துவான் எம். வி. பாலசுந்தரம் பி. ஓ. எல். எவ். ஆர். ஏ. எஸ்

மேடம்- இவ் இராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் மத்திம பலன்தரும் வாரமெனலாம். தேகாரோக்கியம் குறைவடையும். சத்துருக்களின் தொல்லைகளால் மனவேதனையடைவர், வியாபாரிகளுக்கு வியாபாரம்மிகவும் லாபகரமாகவே நடைபெறும். கொடுக்கல்வாங்கல்களினுல் வீண்வாக்குக்கலகம் உண்டு. இவ்வார இறுதியில் குடும்பத்தில்நன்மைவிஷயம் நிகழும்.

இடபம்- இவ் இராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் சிறந்த பலன்களைத் தரும் வாரமாகும். வியாதியால் பலர் வருந்துவர். பொருள் வகையில் நஷ்டம் ஏற்படும். எதிர்பாராத வகையில் பல பொருள்களை இழக்கநேரிடும் உத்தியோக வகையினருக்கு அதிர்ஷ்ட லாபங்கள் ஏற்படும்.

மிதுனம்- இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்களைத் தரும் வாரமெனலாம். திடீர் பிரயாணங்களை மேற்கொள்ளுவார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் மத்திமமாகவே நடைபெறும். கமத்தொழிலாளர்களுக்கு இலாபகரமாகவே தனப்பெருக்கம் ஏற்படும். பொருள்பற்ருக்குறைவு காரணமாக மனவேதனை அடைவார்கள். மறதி, கிறுதி நோயாளர்கள் கவனமாக நடந்துகொள்ளவும்.

கடகம்- இவ் இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் கஷ்ட பலன்களைத்தரும் வாரமெனலாம். காரியத்தடையேற்படும். யோசனை விட்டுக்காரியத்தில் கவனம் செலுத்துதல் நன்மைதரும். கொடுக்கல் வாங்கல்செய்வோர் இவ்வாரம் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும். செலவுகள் அதிகமேற்படும். போதியளவு தன லாபம் வியாபாரவகையினருக்கேற்படும்.

சிங்கம்- இவ்விராசியிற்பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்தரும்வாரமாகும். திரவிய வகையினருக்குப் பெரும்நட்டமுண்டு. எதிர்ப்புக்களால் மனவேதனையும் பொருள் செலவு முண்டு. இருப்பு வியாபாரிகளுக்கு திரவிய இலாபம் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் செய்தல் நன்மையாக நடைபெறும் வாரமாகும். தேகசுகம் சிறிது பாதிக்கப்படலாம்.

கன்னி- இவ் இராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் நற்பலன்சளைத் தரும் வாரமெனலாம். சிலருக்குச்சிறைவாசமேற்படும். கவலையால் வாட்டமுறுவர். கடன் தொல்லையுண்டு. எதிர்பாராதவகையில் அதிஷ்டம் ஏற்படும். வாரமத்தியில் நோய் குணமடையும். பொன், வைரம் சம்பந்தமான தொழில்வகையினருக்கு இவ்வாரம் அதிகலாபகரம் உண்டு. சிலருக்கு பந்தயம், போட்டிவகையில் திரவியலாபமுண்டு.

துலாம்- இவ்இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திமபலன்களைத்தரும் வாரமெனலாம். பிணிசம்பந்தப்பட்டுப்பொருள் செலவழியும். கால்நடைகளை வளர்ப்போர் கவனமாக வளர்க்கவும். வீண்பேச்சு வார்த்தைகளைப் பெண்களோடு வைத்தலாகாது. அபகீர்த்திக்குள்ளாவார்கள் வயிற்றில் ரோகபீடையுண்டு. செலவுகள் கட்டுக்கடங்கும். சிலருக்குபெருந் திரவியப்பேறு கிடைக்கவும் கூடும். தொழிலில்லாத பலர் தொழிலில் ஈடுபடுவார்கள்.

விருச்சிகம்- இவ்இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திமபலன்களைத்தரும் வாரமெனலாம். பந்தையவகையினருக்குத் திரவிய இலாபம் உண்டு. குடும்பத்தில் சில தொல்லைகள் ஏற்பட்டுக்கலங்குவார்கள். கன்னிப்பெண்களுக்குக் கலியாணம் கைகூடுதலும் உண்டு. புதிய நண்பர்களும் வஸ்திரப்பேறும் உண்டு.

தனு-இவ்இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் கஷ்டபலன்கள் மிகுந்து காணும் வாரமெனலாம். தோகாரோக்கியம், சுரத்தால் பாதிக்கப்படும். புத்தி சாதுரியத்தால் கவலையும் கஷ்டமும் நீங்கும். நோய் பொதுவாக உண்டு. பல வகையில் நஷ்டங்கள் உண்டாகும். நிலையிற் கலக்கமேற்படும். இவ்வாரம் நல்ல நண்பர்களும் சத்துருவாகவே மாறுவார்கள். மரணபயமும் வியாகூலமுமடைவார்கள்.

மகரம்- இவ் இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மிக நல்லவாரமாகும். விவாகமாகாத ஆண்களுக்கும்பெண்களுக்கும்மங்களப் பேறுண்டாகும். எதிர்பாராதவகையில் தனலாபமும் திரவிய லாபமும் உண்டு. உத்தியோக வகையிலுள்ளாருக்குத் திரவியலாபமுண்டு. சத்துருக்களின் எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும் கட்டுக்கடங்குவார்கள். வார இறுதியில் நன்மையாகவேமுடியும் புத்திதனமாகக்காரியங்களை நடத்தவும். தேகசுகம் குறைவடையும்.

கும்பம்- இவ் இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்தரும்வாரமெனலாம். தேகத்தில் நீர் பீடை சம்பந்தமான வியாதியுண்டு. திரவியப்பேறு தோட்டமுதலாளிகளுக்குண்டாகும். ஹோட்டல் முதலாளிமார்களுக்குப் பெரும் இலாபம் உண்டாகும். காரியங்கள் பொதுவாகத்தடைப்பட்டே கைகூடுதலுண்டு. கொடுக்கல் வாங்கல்களில் பிணக்குகளுண்டாகும்.

மீனம்- இவ்விராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் தொலலை தரும் வாரமெனலாம். புத்திக்குறைவால் கஷ்டங்களுக்குள்ளாவார்கள். பிரயாணத்தை மேற்கொண்டலைவார்கள். தேகாரோக்கியம் மத்திமமாகவே இருக்கும். இரத்தினம், நகைவகை வியாபாரிகளுக்கு அதிகலாபமுண்டு. பொதுவாக விடயங்கள் கைகூடுதலில் தடையுண்டாகும். மனச்சஞ்சலமேற்பட்டு வருந்துவார்கள்.

## காலச்சக்கரம்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மாக இணைந்து முழங்கியது. சரிதான் உற்சவகாலம் நெருங்கிவிட்டதல்லவா! இவ்வாண்டு இணுவில், கோண்டாவிலில் மட்டும்புதிதாக கோஷ்டிசேர்ந்திருக்கும் மேளங்களின் எண்ணிக்கை நாளதுவரையில் பன்னிரண்டுக்கு மேல்போயிருக்கிறதாம்.

## இதுதான் பெண்மை

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

மண்ணுலாகியது. பொன்கலம் வேலைப்பாடமைந்தது. சுனை உலர்ந்த மிக்க வெப்பத்தையுடையது. பொன்கலம் 'தானேந்தியது', சுனை நிலமேந்தியது.

இவற்றையெல்லாம் அவள் பொருட்படுத்தவில்லை. அவள் தலைவனையே துணையாகக் கருதுவாளானுள். கலங்கிய நீரையும் உறிஞ்சிக் குடிக்கலானுள். ஏன்? இதுதான் பெண்மை.

தலைவன் அருகிருக்கையில், இனிய சுவையையுடைய பாலினும் தலைவிக்கு இனிமை நல்கக்கூடியது கலங்கிய நீரென்பதை மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளும் தெள்ளத்தெளிவாக்குகின்றன. கைப்புண்ணுக்குக் கண்ணுடி தேவையில்லை. அதைப்போல், தலைவனே தலைவிக்குயிரென்பது வெள்ளிடைமலை. ஏன்? இதுதான் பெண்மை.

## தமிழர் கல்விக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாசமிருக்கத்தான் செய்யும். இரண்டையும் செவிசாய்க்கும் மாணவன் எது சரி, எது பிழையென்று தெரியாமல் மயக்கமடைகிருன்.

ஒரு 'பிரைவேட் டியூஷன்' மாஸ்டர் பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தையே பின்பற்றுகிருர் என்று வைத்துக் கொண்டாலும் ஒரே பாடத்தையோ அல்லது ஒரே விஷயத்தையோ இரண்டு வெவ்வேறு ஆசிரியர்மார் விளங்கப்படுத்தும்போது அந்த விளக்கத்தில் மாணவனுக்கு மயக்கம் ஊட்டக்கூடிய அம்சங்கள் இருக்கவேஇருக்கும்.

பள்ளிக்கூடப் பாடத்துக்கு ஒரு முண்டாக, ஒரு 'சப்ளிமென்ட்'டாக, பிறைவேட் டியூஷன் இருக்கிறதே என்ற தைரியத்தில்பெரும்பாலான பெற்ருேர் பள்ளிக்கூடஆசிரியருடன் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றி கலந்துரையாடுவதையும் நிறுத்தி பெற்ருேர்-ஆசிரிய சங்கக் கூட்டங்களுக்கு வருகை தருவதையும் குறைத்துக்கொள்ளுகிருர்கள்.

'பிறைவேட் டியூஷன்' வேலையில் சில பள்ளிக்கூட ஆசிரியர்களே மும்முரமாக ஈடுபட்டிருக்கிருர்கள். அரசாங்க ஊழியர்களான இவர்கள் வேறு எந்தத் தொழிலும் செய்து பணம் சம்பாதிக்கலாகாதென்று அரசாங்கச் சட்டம் இருக்கத்தக்கதாச, இவர்கள் பள்ளிக்கூட அதிபருக்குத்தெரியாமல்தங்கள் வீடுகளில் ஓய்வு நேரங்களில் டியூஷன் சொல்லிக் கொடுத்து நிறையப் பணம் சம்பாதிக்கிருர்கள்.

ஓய்வு நேரத்தில் ஓர் ஆசிரியர் செய்யவேண்டிய கடமை தாம் அடுத்தநாள் கற்பிக்கப் போகும் பாடங்களை தாமே தயார்செய்து முறையானதோர் கல்வித் திட்டத்தை உருவாக்கிக் கொள்வதேயாகும். தம் சிறுவர்களை பள்ளிக்கூட ஆசிரியரிடம் பூரணமாக ஒப்படைத்துவிட்டு இருக்கும் பெற்ருேர்கள் இதையே எதிர்பார்க்கிருர்கள்.

[11-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர் சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## தேவை

ஆனையிறவு உப்பளத்தில் வீடுகள் கட்டுவதற்குப் பின்வரும் பொருட்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. 250 கியூப் 4''—9'' வரை கண்டகல். 12,000 முழம் 4''X2'' பனைமரம் மற்றும் விபரங்களுக்கும். விலைப்பட்டியலுக்கும்தொடர்பு கொள்க: வாக்கேர்ஸ் வேலைப்பிரதிநிதி, சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை அல்லது வாக்கேர்ஸ் மனேஜர் [யாழ்ப்பாணக் கிளை] ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம். 2369

## வாடகைக்கு

வீடு:

முல்லைத்தீவுப்பட்டினசபை கரைச்சிக் குடியிருப்பில் சகல நவீன வசதிகளுடன் [Water Service Water Sealed, latrines etc] 3 அறை புதிய வீடு வாடகைக்குக்கொடுக்க இருக்கிறது. விபரம்: சின்னத்துரை, 26, கரச்சிக் குடியிருப்பு, முல்லைத்தீவு. 1690

## விற்பனைக்கு

தையல் மெஷின்:

ஒரு கைப்பட பாவிக்கப்பட்ட ''சிங்கர்ஹைஸ்பீட்'' மெஷின் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். 180, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1692

## காணவில்லை

கூப்பன்கள்:

நாலு கூப்பன் புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். அதன் விபரம்: M.மீராமுகிதீநாச்சியா 660816, S. லத்பா 660817, M.அஸீம் 660818, S.முகம் மதுகரீம் 660819. 1696

## கல்வி

சிங்கள வகுப்பு

எமது கலாசாலையில், ஆரம்ப சிங்கள வகுப்பொன்று அண்மையில் ஆரம்பிக்கவிருக்கிறது. கல்வி பயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும். A. p. டானியல், தபாற்கந்தோரடி, கரவெட்டி. 1688

பெண்களுக்கென பருத்தித்துறை ரோட், உடுப்பிட்டியில் வர்த்தக பாடங்கள் [தமிழ் / ஆங்கிலம்] தையல், சிங்களம். காலை, மாலை வகுப்புக்கள் தொடக்கபட்டுவிட்டன. பார்வையிட்டுப் படிக்கவும். வர்த்தகக் கல்லூரி [ஸ்தாபிதம் 1924] பெண்பாடசாலை, நீதிஸ்தல வீதி, பருத்தித்துறை, 1694

## நன்றிநவிலல்

உடுவில் மகளிர் கல்லூரியில் 6-4-67-ல் நடைபெற்ற மதிப்புக்குரிய சிறியதாயார் சின்னப்பிள்ளை அம்மாளின் இறுதிச்சடங்குவைபவத்தில் பங்குகொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உற்றூர் அழுதிட ஊரார் புலம்பிட உண்மையினில், பற்றூர்ந்த மக்கள் பதைத்து மிகப்பரிதபிக்க, கற்றூர் கதறிட கல்லூரி கலங்கி நிற்க, நற்றூர் ரணிவிட்டு நல்லாள் நடந்தனளே! 2376

## நன்றி

காலஞ்சென்ற எமது தந்தையார் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் ஈமக்கிரியைகளின் போது கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் இருதயபூர்வமான நன்றியைத்தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றியைத் தெரிவிக்க முடியாமைக்காகப் பெரிதும்வருந்துகின்றோம். க. மங்களேசுவரக் குருக்கள், க. இரத்தினசபாபதிக்குருக்கள், க. வைத்தீஸ்வரக்குருக்கள். ஈழத்துச்சிதம்பரம், காரைநகர். 1695

3-வது வெற்றி வாரம்

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | நவா [கொம்பனித்தெரு] |
| வெம்பிளி [கண்டி] | மொடேன் [பதுளை] | நியூசினிமா [குருணகலை] |
| விஜயா [மட்டக்களப்பு] | | ஸ்ரீகிருஷ்ண [திருமலை] |
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | | |

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனேகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனேரமா, கருணநிதி
மற்றும் பலர் நடிக்கும்

# இரு வல்லவர்கள்

## அம்பாள் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு கொழும்புத்துறை கிழக்கு மகாமுத்துமாரி அம்பாள் கோவில்மகாசங்காபிஷேகம் நாளை பகல் 12மணிக்கு ஆரம்பமாகும் பிற்பகல் அன்னதானமும், இரவு அம்பாள் வீதிவலமும்நடைபெறும்.

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு ஏப்ரல் [சித்திரை]மாதம் 23-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிவரையும் வட்டுக்கோட்டைக் கிராமசபை அக்கிராசனரால் பதிவு செய்யப்பட்டகொந்தராத்துக்காரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிட்ட வேலைகளுக்குச் சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 21-4-67-ந் தேதி பி. ப. 3 மணிவரையும் ரெண்டர்ப் பணமாக ரூபா 25/-ம் ரெண்டர்ப்பத்திரப் பணமாக ரூபா 2/-ம் கட்டிப்பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்கள்யாவும் எனதுகந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

தா. சிவகுருநாதன்,
தலைவர்,
வட்டுக்கோட்டைக்
கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
6-4-1967.

வேலைகளின் பெயர்

1. நொச்சிக்காட்டு ஒழுங்கை திருத்தும் வேலை.
2. வட்டுக்கோட்டை [கொத்தத்துறை] சுடலை ரோட்டுத் திருத்தும் வேலை. 1735

இப்பொழுது திரையிடப்படுகிறது
மனோஹரா [யாழ்ப்பாணம்]
6-30, 9-30மணி. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் 4 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி நடித்த
புத்தம்புதிய கொப்பி
சம்சாரம்

நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜிகணேசன் நடித்த
திரும்பிப்பார்

7-4-67 முதல்
ஈஸ்வரன் [கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ். எஸ். ஆர்.-விஜயகுமாரி நடித்த
ஆனந்தி 1727

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி நடித்த
ஆனந்தி

REGAL - JAFFNA
Steve McQueen
James Garner
in
THE GREAT ESCAPE

## தமிழர் கல்விகக . . .

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

நான்அறியத்தக்கதாக ஓர் அரசாங்கப் பள்ளிக்கூடஆசிரியர் மாலையில்வீடுதிரும்பியதும் அங்கே ஒரு குட்டிப் பள்ளிக்கூடத்தையேநடத்துகிறார். அவர் வீட்டு விருந்தையில் பள்ளிக்கூடத்தில் இருப்பதைப்போல மேசை, கதிரைகளும், கரும்பலகையும்இருக்கின்றன. படித்துப் பாஸ் பண்ணிவிட்டு வேலையில்லாமலிருக்கும் சில இளைஞர்களை அவர் துணைக்கு வைத்துக்கொள்கிறார். பத்து இருபது மாணவர் டியூஷனுக்கு வருகிறார்கள். ஆசிரியர் கல்யாண வீடு, செத்த வீடு, அந்தியட்டி, வீட்டுக் கிருத்தியம் என்று எங்கேயாவது போய்விட்டால் இந்த இளைஞர்களே வாத்தியார் பதவியை மேற்கொள்ளுகின்றார்கள்.

மாதம் முடிய ஆசிரியருக்கு கொழுத்ததோர் பொன் முடி.

அடுத்தவாரம்சந்திப்போம்.


—சட்டம்பியார்

## உலக மேடை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

துழைப்பும் அளிக்கக்கூடிய ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்வதும் ஜனநாயக, இராணுவ ஆட்சி முறைகளை ஆராய்ந்து ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கேற்ற சில ஆட்சி அமைப்பு முறைகளை வகுத்துக்கொள்வதும் பயனளிக்கக்கூடியதாகும். இந்த முயற்சிக்கும்கூட அந்நிய தலையீடு இல்லாமலிருக்க வேண்டுமே!

கார், லொறி, றெக்டர், லோஞ், தண்ணீர் பம்
முதலியவற்றிற்கு
றீபோரிங், றீசிலிவிங்,
வால்(f) சீற் அடித்தல்,
வால்(f) சீற் வெட்டுதல்,
வால்(f) பேஸ் பண்ணுதல்
முதலியவற்றிற்கும்
கார், லொறி, றெக்டர்
ஆகியவைகளுக்கு
விசேஷ யந்திரங்கள் மூலம்
பிறேக் றம், பிறேக் லைன்,
கிளச் அசெஸ்மென்ட்
செய்வதற்கும்
மற்றும்
சகல விதமான
கடைச்சல்-புரி வெட்டுதல்
போன்ற வேலைகளுக்கும்
எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்!




### நோத் எண்ட் மோட்டார் வேக்ஸ

(ஒட்டோமோபயில் என்ஜினியர்ஸ்)
291, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.
(அ. சி. விஷ்ணுசுந்தரம் கட்டிடம்)

குட் இயர்

# ரயர்களும் ரியூப்களும்

1967 மே மாதம் முதல்வாரமளவில் கீழ்வரும் அளவுகளிலுள்ள ரயர்கள் விநியோகத்துக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது.

கையிருப்பு அளவாக உள்ளதால் இப்பொழுதே எம்மிடம் வந்து உங்கள் தேவைகளை பதிவு செய்துகொள்ளுங்கள்.

| | |
|---|---|
| 5.20X13— | குட்இயர்ரியூப்இல்லாத ரயர்கள் |
| 6.50X13— | ,, ,, ,, |
| 5.20X14— | ,, ,, ,, |
| 5.60X15— | ,, ,, ,, |
| 7.50X16— | ,,சுப்பர் H.M. ரயர்கள் 8பிளை |
| 7.00X20— | ,,சுப்பர்H.M. ரயர்கள் 10பிளை |
| 7.50X20— | ,, நைலோன்டிரக் ரயர்கள் 10பிளை |
| 8.25X20— | ,,நைலோன்டிரக் ரயர்கள் 12பிளை |
| 400X19 — | ,,டிராக்டர் ரயர்கள் 4பிளை |
| 550X16 — | ,, ,, ,, 4பிளை |
| 600X16 — | ,, ,, ,, 4 பிளை |
| 11X28 — | ,, ,, ,, 4பிளை |

எமது பதிவேடுகளில் பதிவு செய்வதற்கு தயவு செய்து உங்கள் வாகனங்களின் பதிவுப் புத்தகத்தையும், 1967-ம் ஆண்டிற்குரிய வருமான லைசென்சையும் கொண்டுவரவும்.

# புத்தையாமோட்டார் ஸ்ரோர்ஸ்

மோட்டார் உதிரிப்பாகங்கள், துணைக்கருவிகள்
இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்,
89, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
போன்:514 கிராம்: ஜெனூரயின்,
1734

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரசாரர்

[2- ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை-இந்தியஒப்பந்த மசோதாவில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் திரு தொண்டமானின் யோசனைபின்படி பிரதமர் செயலாற்றினுல் அடுத்த பிரதமராக ஒருதமி

## அடுத்தபிரதமர் ஒருதமிழரா?

ழர் வரக்கூடுமென்று ஆர்ஜி சேனநாயகா அபாயச்சங்கு ஊதுகிருர். இந்தியர் பிரச்னை, மொழிப்பிரச்னைஆகியவைகளில் ஆர், ஜி. என்ன சொல்லுவார் என்பது தெரிந்ததுதான். ஆனுலும் இலங்கையில் உயர்பதவியில் தமிழர் அமர்வதற்கு இங்கு இடமே இருக்க மாட்டாதென்பதும் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தவருக்கு மட்டுமேதான் கிடைத்ததென்பதுமே உறுதியாக்கப்பட்டு வருகிறது.

ஆர். ஜி. சேனநாயகாவுடன் அஸ்கிரிய பௌத்த பீடத்தலைவரும் 1958க்கு முன் அதிகம் பெயர் அடிபட்ட பத்தேகமவிமலவன்ச தேரோ போன்றவர்களும் சேர்ந்திருக்கின்றனர். இந்தியர் பிரச்னையும் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னைதான் என்றுகூறிவரும் இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்த திரு எச். ஜி. எஸ். ரத்னவீராவும் இதில் சேர்ந்திருக்கிருர். இலங்கைப் பிரஜையாகும் இந்தியவம்சாவழி மக்களின் தனிவாக்காளர் தாபிதா வைக்க வேண்டுமென்றும் இல்லையேல் பார்லிமெண்டில் சிங்களமக்களின் பிரதிநிதித்துவம் குறைந்துவிடுமென்றும் ஆர். ஜி. கூறுகிருர். பார்லிமெண்ட் பிரதிநிதித்துவம் பொருளாதாரப்பிரச்னையா? இந்திய வம்சாவழியினர்பிரச்னையை மீண்டும்பெரிதுபடுத்தி நாட்டில் இந்திய துவேஷத்தைக் கிளப்ப கால்கோள் நாட்டப்பட்டு விட்டதென்று சொல்லலாம். இதற்கான முயற்சிகள் திரு. ஆர். ஜி சேனநாயகாவின்இல்லத்தில் நடந்து கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துடன்ஆரம்பித்திருக்கிறது.

இந்திய வம்சாவழியினரைக் கட்டாயமாக நாடு கடத்தவேண்டுமென்பதும் ஆர். ஜி. யின் யோசனை. நல்லகாலம் 'அவர்களைச் சுட்டுத்தள்ள வேண்டும்' என்று அவர் கூறவில்லை.

இதேசமயம் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை தமிழரசுக்கட்சி ஆதரிப்பதால் அதற்கு தமிழரசுக்கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இப்பிரச்னையை வைத்தே புதிய கட்சியொன்றும் உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்சியின் கொள்கையும் 'சமஷ்டி ஆட்சி' ஏற்படுத்துவதுதான். இது தவிர தனிநாடு கோரியும் ஒரு புதிய கட்சி தொடங்குவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்.

இப்பொழுதுள்ள நிலையைப்பார்க்கையில், உணவு உற்பத்தி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு. வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய முக்கிய பொருளாதாரப் பிரச்னைகள் மீண்டும் பின்தள்ளப்பட்டு அடுத்த தேர்தலில் இந்தியர் பிரச்னையே முக்கிய பிரச்னையாக விளங்கும்போல் தெரிகிறது.

## வடக்கு நோக்கி திருமதி சிறிமா

அடுத்த தேர்தலில் வடக்குப்பகுதி மக்களின் ஆதரவையும் பெறும் நோக்கத்துடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் வடக்கு மாகாணத்துக்கு வரவிருக்கின்றனர். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும்' யுக்தியை சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி கையாண்டு, ஹரிஜன ஆலயப் பிரவேசப் பிரசாரத்தில் ஈடுபடுகிறது. இதைப் பார்த்தே சந்தர்ப்பத்தை தாங்களும் பயன்டுத்திக் கொள்ளலாமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இங்கு வரவிருக்கின்றன.

## வல்வெட்டித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டித்தும் ஆட்சேபித்தும் கூட்டமொன்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வல்வெட்டித்துறை பட்டின சபைத்தலைவர் திரு. ரத்தின வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பொலிசார் திடீரென்று அவ்விடத்துக்கு வந்ததாகவும் கூட்டத்திலிருந்ததவர்கள்மீது குறுந்தடிப்பிரயோகமும், துப்பாக்கிப்பிரயோகமும் செய்ததாகவும் கூறப்படுகிறது.

கூட்டத்தினர் முதலில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த பொலிஸாருக்கு கல்லெறிந்ததைத் தொடர்ந்தே பொலிஸார் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இதனைத் தொடர்ந்து, கூட்டத்திலிருந்தும் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் தாக்குதலைத் தொடர்ந்து, இராணுவத்தினரும் சேர்ந்துகொண்டு கடைகள் சிலவற்றை உடைத்ததாகவும், எரித்ததாகவும் கூறப்பகிறது.

மேடையிலிருந்து பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் உட்பட பலரும் பொலிஸ் தாக்குதலுக்குள்ளானதாகச் சொல்லப்படுகிறது.

பொலிஸாரின் தாக்குதலை எதிர்த்து சிலர் கல்லெறிந்ததைத் தொடர்ந்து, பொலிஸார் தொடர்ந்து விடாது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களாம்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, வல்வெட்டித்துறையிலுள்ள கடைகளெல்லாம் பூட்டப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையில் இப்போது பலத்த பொலிஸ் இராணுவ பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இதுசம்பந்தமாக விசாரணை செய்துகொண்டிருக்கிருர்.

---

பிரதமராக இருக்கும்போது இங்குவராத திருமதி சிறிமா இப்பொழுதாவது இங்கு வர முன்வந்துள்ளது நலலது. அவரை நல்வரவு கூறி வரவேற்க வேண்டும். ''இன்னு செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடல்'' என்பதுதமிழ் மறை. இதுவே தமிழர் பண்பு. திருமதி சிறிமாஇங்கு வந்து இங்குள்ள மக்களுடன் சில தினங்கள் தங்கியிருந்து, அவர்களுடன்பழகிச்சென்ருரானுல் தமிழ் மக்கள் பற்றி அவர் கொண்டுள்ளதவருன அபிப்பிராயம் நீங்கலாம்.

சில தினங்களுக்கு முன் பார்லிமெண்டில் பண்டிதர் இரத்தினத்தின் தனிநபர் பிரேரணை மீது பேசிய சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. டி. பி. ஹெரத்பேசுகையில் சிங்களவர் தமிழை இரண்டாவது மொழியாகவும், தமிழர் சிங்களத்தை இரண்டாவது மொழியாகவும படிக்கவேண்டும் என்று தெரிவித்தார். எதிர்க்கட்சியினரின் கொள்கை இதுவானுல் இங்கு மொழிப் பிரச்னையே இல்லாமல் போய்விடுமே.

## யுதாண்ட்இனறு..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாம் வெளிவிடுவதாகஅவர் மேலும் தெரிவித்தார்.

இன்று யுதாண்ட் ராணி மாளிகைக்குசசென்று மகாதேசாதிபதியைச் சந்தித்தார். இன்று பிற்பகலில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவின் சொந்த வாசஸ்தலத்துக்குச் சென்று அவருடன் உரையாடினுர். யுதாண்ட் இங்கு இரு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். நாளை பிரதமர் டட்லி சேனநாயக்காவைச் சந்தித்து பேசும் யுதாண்ட்டிடம், வியட்நாம் தகராறுபற்றிய தமது புதிய யோசனையை பிரதமர் அவரிடம் தெரிவிப்பார்.

வியட்நாம் பிரச்னை முற்றிலும் உள்நாட்டுப் பிரச்னை. அதனை அந்நாட்டு மக்களே தீர்த்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே பிரதமர் தமது யோசனையை யுதாண்டிடம் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குழாய் நீர்த் திட்டம்

### ஆராயப்படும்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டிக்குக் குழாய் மூலம் நீர் விநியோகம் செய்யவும், அத்துளுக்குளத்திட்டம் மூலம் நீர்ப்பாசன அபிவிருத்தி செய்யவும் அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து அத்துளுக்குளம் குழாய் நீர்த்திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நீரியல் ஆராய்ச்சி நிபுணர்களடங்கிய கோஷ்டியொன்று இம்மாதம் கரவெட்டிக்கு விஜயம் செய்யவிருப்பதாக தெரிய வருகிறது.

நிபுணர்களின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டால் 4இலட்சம்ரூபா செலவில் அத்துளுக்குளத்தில் குழாய் நீர்த் திட்டம் நிறுவப்படும்.

## மரணஅறிவித்தல்

### எஸ் எம் மனுவேல்பிள்ளை

திரு. எஸ். எம். மனுவேல் பிள்ளை காலமாகிவிட்டார். இவர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபரும், முன்னுள் கொழும்புத்துறை புனித சூசையப்பர் போதனு கழக அதிபருமான வண. பிதா எம். ஜே. மரியாம்பிள்ளையின் அருமைத் தகப்பனுரும், யாழ்ப்பாணம் லெயிடன் இன்டஸ்றீஸ் மனேஜிங் டைரக்டர் திரு. ஜோசெப்பின் மாமனுருமாவர். அன்னரது பூதவுடல் நாளை திங்கட்கிழமை [10-4-67] காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை கரம்பன் சேமக்காலைக்கு அடக்கம் செய்யப்படுவதற்காக எடுத்துச்செல்லப்படும். 1086

---

தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கொழும்பு நாடுகளின் பிரதமர்கள் மகாநாடு 1955-ம் ஆண்டு இங்கு நடைபெற்றபோது முதல் தடவையாக இங்கு வந்திருந்தார். அப்போது யுதாண்ட் பர்மியப் பிரதமர் ஊநூவின் ஆலோசகராக இருந்தார்.


சிங்கம் மார்க்

சந்தனாதித்

தைலம்

யாழ்ப்பாணப் பகுதி ஏஜண்ட் என். எம். எஸ். & பிரதர், கே.கே.எஸ். றேட், யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible]கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் [illegible] 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org